பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 25 வெள்ளிக்கிழமை (09.01.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:044

பொதுசன நூலகம்

# சண்டே லீடர் ஆசிரியர் லஸந்த கல்கிசையில் சுட்டுக் கொலை!

## நேற்றுக்காலை கொடூரம்



கொழும்பு, ஜனவரி 09

கொழும்பிலிருந்து வெளியாகும் 'த சண்டே லீடர்' ஆங்கில வாரப்பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லஸந்த விக்ரமதுங்க நேற்று சுட்டுக்கொல்லப்பட்டார்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் கல்கிஸை அத்திடிய பேக்கரிச் சந்திக்கு அருகில் தனது காரில் பயணித்துக் கொண்டிருந்தவேளை இனந்தெரியாதவர்களால் சுடப்பட்ட லஸந்த விக்ரமதுங்க, களுபோவில மருத்துவமனையில் மூன்று மணிநேரம் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

கல்கிஸையிலுள்ள தனது அலுவலகத்திற்குக் காரில் சென்றுகொண்டிருந்த லஸந்த மீது மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்து வந்த இரு இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர் - என்று தெரிவிக்கப்பட்டது.

லஸந்த விக்கிரமதுங்க, தன்னை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்தவர்களை அவதானித்துள்ளார் என்றும், அதனை வேறு ஒருசிலருக்குக் கைத்தொலைபேசி (16 ஆம் பக்கம் பார்க்க)

## எஞ்சியுள்ள ஊடக சுதந்திரத்தையும் நசுக்கும் முயற்சியே லசந்தவின் கொலை

### இலங்கை பத்திரிகை ஆசிரியர் கழகம் கண்டனம்

கொழும்பு, ஜன.9

''சண்டேலீடர்'' பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலையை இலங்கை பத்திரிகை ஆசிரியர்கள் கழகம் மிக வன்மையாகக் கண்டித்துள்ளது.



இலங்கையில் எஞ்சியுள்ள ஊடக சுதந்திரத்தையும் நசுக்கும் இந்த முயற்சியை கவலையுடன் பதிவு செய்து கொள்வதாக மேற்படி கழகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ள தாவது:

எம்.ரி.வி நிலையத்தின் மீது செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து பத்திரிகை ஆசிரியர் லசந்த கொலை செய்யப்பட்டிருப்பது, ஜனநாயகத் தையும் சட்டத்தின் ஆட்சியையும் தூக்கி எறியும் தன்மையைக் கொண் டிருக்கிறது.

ஊடகத்துறைக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள (16 ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நிபுணர்களைக் கொண்டு விசாரணை நடத்துமாறு எதிர்கட்சிகள் வலியுறுத்து

கொழும்பு, ஜன.9

சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பாக சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேற்கண்டவாறு எதிர்க் கட்சிகள் அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளன.

எதிர்கட்சிகள் நேற்று கொழும்பில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் வைத்து இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளன.

பொலிஸார் நடத்தும் விசாரணைகள் போதுமானவையாக அமையாது. எனவே சர்வதேச நிபுணர்கள் மூலம் விசாரணைகள் (16 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்குத் தொடர்பில்லையாம்; அடித்துக் கூறுகிறார் அமைச்சர்

கொழும்பு, ஜன. 09

'சண்டே லீடர்' ஆசிரியர் லஸந்த விக்ரமதுங்க சுட்டுக்கொல்லப்பட்டமைக்கும் அரசுக்குமிடையில் எந்தவித சம்பந்தமுமில்லை என்று அரசு நேற்றுத் தெரிவித்தது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பாவே அரசின் சார்பில் இதைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

'சிரச' ஊடக நிறுவனம் மீதும் 'சண்டே லீடர்' ஆசிரியர் லஸந்த விக்ரமதுங்க மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுடன் சிலர் அரசைத் தொடர்புபடுத்துகின்றனர்.

அரசு மீது சுமத்தப்படும் இவ்வாறான குற்றச்சாட்டுகளை நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். நாம் ஊடகங்களை மதிக் (16 ஆம் பக்கம் பார்க்க)

## பளையைக் கைப்பற்றியதாக இராணுவம் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஜன. 09

வடக்கில் படை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள இராணுவத்தின் 53 ஆவது, 55ஆவது படைப்பிரிவினர் பளைப் பிரதேசத்தை நேற்று வியாழக்கிழமை காலை கைப்பற்றினர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

புதன்கிழமை இடம்பெற்ற கடும் மோதலுக்குப் பின்னர் பளையைக் கைப்பற்றிய இராணுவத்தினர், அங்கு தமது நிலைகளைப் பலப்படுத்திய பின்னர் ஆனையிறவை நோக்கிய நகர்வை மேற்கொண்டுள்ளனர் எனப் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. படையினர் தற்போது சோரன்பற்றுப் பகுதியை நோக்கி (16 ஆம் பக்கம் பார்க்க)

## வட்டக்கச்சி, தர்மபுரம் பகுதிகளில் ஷெல் வீச்சினால் ஏழு பேர் பலி!

கொழும்பு, ஜன.09

கிளிநொச்சி, வட்டக்கச்சி மற்றும் தர்மபுரம் பகுதிகள் மீது மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் குழந்தை உட்பட ஏழுபேர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர் என்று இணையத்தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வட்டக்கச்சி, கல்மடு மற்றும் இராமநாதபுரம் பகுதிகள் நோக்கி நேற்று அதிகாலை 5 மணியளவில் இடம்பெற்ற பீரங்கித் தாக்குதலில் குழந்தை ஒன்று உட்பட மூவர் உயிரிழந்தனர். 13 பேர் வரை படுகாயமடைந்தனர்.

11 மாதக் குழந்தையான சுதாகரன் சுடர்நிலவன், கே.பிரதீபா(வயது - 20) மற்றும் கமலா (வயது - 56) ஆகியோரே உயிரிழந்தனர்.

மா.ஜெகராஜ்(வயது -16), தாரணி (வயது - 06), அன்ரனி (வயது - 16), சசி (வயது- 25), அன்ரனி லக்சுமி (வயது - 23), கலிஸ்ரன் (16 ஆம் பக்கம் பார்க்க)

## முள்ளியவளையில் 12 இடங்களில் இரு தரப்புகளும் புதனன்று மோதல்

கொழும்பு, ஜன.9

முல்லைத்தீவு, முள்ளியவளையில் புதன்கிழமை விடுதலைப் புலிகளுடன் 12 மோதல்கள் இடம்பெற்றன எனத் தெரிவித்துள்ள பாதுகாப்பு வட்டாரங்கள் அதன்போது படையினருக்கு கணிசமான இழப்புகள் ஏற்பட்டன என்றும் குறிப்பிட்டுள்ளன.

முள்ளியவளைக்கு வடக்கேயுள்ள கெற்பபுலவுவில் பகல் 11.30 மணியளவில் மோதல் இடம்பெற்றுள்ளது. இதன்போது ரி.56 ரகத் துப்பாக்கியொன்று மீட்கப்பட்டது எனவும் பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது (16 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லை: வான் பரப்பில் இந்திய விமானங்களா?

### பிரதமர் அடியோடு மறுப்பு

கொழும்பு, ஜன. 09

வன்னி வான் பரப்பில் இந்திய உளவுத்துறை விமானங்கள் பறந்து உளவுத் தகவல்களைச் சேகரித்தன என்று வெளியான செய்தியை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று நாடாளுமன்றில் மறுத்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வீணியவரையில் நாளை திருவாதிரை உற்சவம்

மாவிட்டபுரம், வீணியவரை ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான திருவாதிரை தேர் உற்சவம் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு இடம்பெறவுள்ளது.

காலை விசேட அபிஷேகம், பூஜை, திருவூஞ்சல் என்பன இடம்பெற்று முற்பகல் 11 மணியளவில் புதிதாக அமைக்கப்பட்ட தேரில் அம்பாள் வீதி வலம் வருவார்.

காலை 9 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை ஆலயத்தில் பக்தர்கள் வழிபட படையினர் அனுமதி வழங்கியுள்ளனர் என்றும் -

பக்தர்கள் காலை 9 மணிக்கு தெல்லிப்பழை தடை முகாடுக்கு வர வேண்டும் என்றும் - ஆலய நிர்வாகி அ.துரைச்சாமி ஐயர் தெரிவித்தார். (1)


## பொருளியற் கல்லூரி

| நாவலர் றோட், யாழ்ப்பாணம். | கே.கே.எஸ். றோட், இணுவில் |
|---|---|

(இரு இடங்களிலும்)

எண்ணற்ற மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பிவைத்த உங்கள் கலைப்பிரபலங்கள், வர்த்தகப்பிரபலங்கள் நாளை உங்களிடம் சந்திக்கின்றார்கள்

A/L 2011

கலை - வர்த்தகம் ஜனவரி - 10 இல்

| 2011 | யாழ்.நகரில் | இணுவிலில் |
|---|---|---|
| பொருளியல் | M.C.சுதாகரன் | M.Cசுதாகரன் |
| கணக்கீடு | முகுந்தன் | முகுந்தன் |
| வணிகக்கல்வி | முரளி | முரளி |
| தமிழ் | மீரா | பாலா |
| இந்துநாகரிகம் | ஜோதீஸ்வரன் | சுரேஸ் |
| புவியியல் | குமரன் | குமரன் |
| அளவையியல் | R.P.சர்மா | ஜெயசுரேஸ் |
| நாடக- அரங்கியல் | கணேஷ் | கணேஷ் |
| வரலாறு | சுதன் | சுதன் |
| அரசியல் | ஜெனா | கோகுலன் |
| கிறிஸ்தவம் | ஜெயமோகன் | ஜெயமோகன் |
| இந்துசமயம் | தரன் | தரன் |
| விவசாயம் | விக்கி | சிவரூபன் |
| ஆங்கிலம் | ஜைசன், நிஷாந்தன் | ஜைசன், நிஷாந்தன் |

யாழ்.நகரில் கலை, வர்த்தகம் - 8.30 a.m.
இணுவிலில் கலைப்பிரிவு 9a.m., வர்த்தகப்பிரிவு 2p.m.

பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணத்தில் எப்படி பிரபல்யமோ இதே போல் சித்தன்கேணியில்

BARATHY

இங்கும் ஆரம்பமாகின்றன
A/L 2011 கலை - வர்த்தகப்பிரிவு
ஜனவரி - 10இல்


## மரண அறிவித்தல்கள்

### குணசிங்கம் அஞ்சலிதேவி

ஆசீர்வாதப்பர் வீதி, நல்லூரை வசிப்பிடமாகக் கொண்ட குணசிங்கம் அஞ்சலிதேவி நேற்று (08.01.2009) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு - சின்னத்தங்கத்தின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - இளையபிள்ளை ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற கந்தையா குணசிங்கத்தின் அன்பு மனைவியும், சுபாசினி, நிஷாந்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும், கங்கேஸ்வரனின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.01.2009) சனிக் கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இல. 28, ஆசீர்வாதப்பர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
பிள்ளைகள், மருமகள்

### வல்லிபுரம் மாணிக்கம்

சரசாலை வடக்கு, சரசாலையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வல்லிபுரம் மாணிக்கம் நேற்று (08.01.2009) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் அன்பு மனைவியும் புனிதவதி, இராஜதுரை, யோகநாதன், தேவராசா, இராசரத்தினம் ஆகியோரின் பாசமிகு தாயாரும் தம்பிஜயா, சுதந்திரதேவி, ரஞ்சனா, நிர்மலாதேவி, ஜெயசிறி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.01.2009) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கும்பிகுளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

## பொருள்கள் வாங்குவதற்கான அன்பளிப்பு அட்டைகள்

யாழ்ப்பாணம், ஜன.9

கொமர்ஷல் வங்கியில் 2008 ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அதே மாதம் 31 ஆம் திகதி வரை இசுறு - சிறுவர் கணக்கு ஆரம்பித்தவர்களுக்கே 'கூட்டுறவு நகர்' கடைகளில் பொருள்கள் கொள்வனவு செய்ய அன்பளிப்புச் சிட்டைகள் வழங்கப்படுவதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் காலப்பகுதிக்குள் கணக்கை ஆரம்பித்தவர்கள் அன்பளிப்பு சிட்டைகளைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

2008 நவம்பர் தொடக்கம் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை இசுறு - சிறுவர் கணக்கு தொடங்கியவர்களுக்கு பொருள்கள் வாங்குவதற்கு அன்பளிப்புச் சிட்டைகள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது தவறாகும் என அறிவிக்கப்படுகிறது. (அ-1)

## யாழ். சாயி சேவா நிலையத்தில் போயா ஆன்மீக நிகழ்வு

யாழப்பாணம், ஜன.9

யாழ். சாயிசேவா நிலையத்தில் போயா ஆன்மீக நிகழ்வு நாளை சனிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக ஆங்கில இலக்கியத்துறை உதவி விரிவுரையாளர் செல்வி சிவகௌரி சிவகுருநாதனின் சிறப்புச் சொற்பொழிவும் இடம்பெறும்.

எதிர்வரும் புதன்கிழமை பொங்கல் நிகழ்ச்சிகள் பி.ப. 2 மணிக்கு ஆரம்பமாகும். (204)

## கண்காட்சி ஒத்திவைப்பு

அச்சுவேலி, ஜன.9

கோப்பாய் கல்விக் கோட்ட கற்றல் கற்பித்தல் துணைச்சாதன கண்காட்சி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நாளை சனிக்கிழமை புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியில் நடைபெறவிருந்த இந்தக் கண்காட்சி ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாகவும் கண்காட்சி நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் கோப்பாய் கோட்டக் கல்வி அதிகாரி வி.எஸ்.சித்திரவடிவேல் அறிவித்துள்ளார். (1-11)


## பொருளியற் கல்லூரி

யாழ்ப்பாணம்.

யாழ்.மண்ணில் முதன்முறையாக

ENGLISH MEDIUM
A/L 2011 BATCH

வர்த்தகப்பிரிவு

கணக்கீடு: முகுந்தன் B.B.A (HONS)
பொருளியல்: M.C.சுதாகரன் B.Com (HONS)
வணிகக்கல்வி: முரளி B.B.A (Spl)

ஆரம்பம்: 10.01.2009
சனி 11.00 a.m

SPOKEN ENGLISH
Lectures
By:- NISHANTHAN Dip.in.Eng.

சனி, ஞாயிறு பிரிவுகள்
புதிய பிரிவு ஆரம்பம்:
10.01.2009
பின்வரும் மூன்று நிறுவனங்களில்
பொருளியற் கல்லூரி - யாழ்
சனி - ஞாயிறு - 3.00 pm
பொருளியற் கல்லூரி - இணுவில்
சனி - ஞாயிறு - 11.00 am
BARATHY - சித்தன்கேணியில்
சனி - ஞாயிறு - 4.30 pm

நீங்கள் விரும்பிய இடங்களில் உங்கள் அனுமதிகளை பெற்றுக் கொள்ளவும்.


"கர்த்தருடைய பரிசுத்தவான்களின் ம[illegible]ம் அவர் பார்வைக்கு அருமையானது" சங்[illegible]:15

## இதயத்தின் விம்மல்கள்.....



எமது சக பணியாளர் சரண்யா அவர்களின் அன்புத் தந்தை

அமரர்

### நடராஜா பத்மதேவா

(யாழ். மத்திய கல்லூரி)

07.01.2009 அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தமையால் துயருற்றிருக்கும் எமது சகபணியாளர் சரண்யா அவர்களுக்கும் அவரது உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இல. 55, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3486

பணியாளர்கள்.
LEADS

## மரண அறிவித்தல்கள்

### நடராஜா பத்மதேவா



அன்பான இயேசு ஜீவகீதங்கள்புகழ் பாடகர் சுவிஷேசகர், சகோதரன் நடராஜா பத்மதேவா 07.01.2009 புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

இவர் நடராஜா - இராசலட்சுமியின் அன்பு மகனும் அமரர் கல்யாணியின் அன்புக் கணவரும் சரண்யாவின் பாசமிகு தந்தையும் லிங்கேஸ்வரி, பத்மராஜா, சிவனேஸ்வரி, சந்திரேஸ்வரி, பத்மசேகரா, பத்மசூரியா, பத்மசீலன், ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரசேகரன், சுசீலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 10.01.2009 சனிக்கிழமை மதியம் 12 மணிக்கு அவரது இல்லத்தில் எக்காளத்தொனி சபை ஊடாகநடைபெற்று தாவடி கல்வாரி சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஊழியக்காரர்கள் விசுவாசிகள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அன்பு மகள் P.சரண்யா.

### ஆறுமுகம் கனகரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்)



வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் நவாலி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் கனகரத்தினம் நேற்று முன் தினம் (07.01.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்- நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அப்புத்துரை-தையல்நாயகி தம்பதியரின் மருமகனும் கடம்பேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை ) அன்புக் கணவரும் வானதி (ஆசிரியை, யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை),ஜெயதேவன், சிவகுமாரன், அரவிந்தன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், பரிமளம் மற்றும் நாகரத்தினம், செல்லம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் பாலசுப்பிரமணியம் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும் பாஸ்கரன், ரகுநாதன் ஆகியோரின் மைத்துனரும் வசந்தியின் மாமனும் ஆதித்தன், அஸ்வினி, ஆகியோரின் பேரனும் சுந்தரகுமாரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.01.2009) வியாழக் கிழமை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார் , உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'பிருந்தாவனம்',
நவாலி வடக்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.


NEC Clock Tower Road, Jaffna
A/L 2011 நாவலர் ஆனைப்பந்தி.

கலை, வர்த்தக, கணித, உயிரியல் பிரிவுகள்
ஆரம்பம்: 10.01.2009 (நாளை)

கணித, உயிரியல்பிரிவு
இரசாயனவியல்: S.வாசு
பௌதீகவியல்: K.செல்வன்
இணை.கணிதம்: S.யூட்
உயிரியல்: V.A.ஞானேந்திரன்

வர்த்தகப் பிரிவு
கணக்கீடு: P.பகீரதன்
பௌதீகவியல்: N.B.கஜீதரன்
வணிகக்கல்வி: V.K.ரவிகரன்

கலைப் பிரிவு

| NEC | பாடம் | நாவலர் |
|---|---|---|
| N.B.கஜீதரன் | பொருளியல் | N.B.கஜீதரன் |
| A.K.கீர்த்திராஜன் | தமிழ் | A.K.கீர்த்திராஜன் |
| S.பத்மராஜா | இந்துநாகரீகம் | S.பத்மராஜா |
| P.கமல் | அளவையியல் | P.கமல் |
| S.R.பாலா | புவியியல் | N.பாபு |
| A.K.றொபின்சன் | அரசியல் | A.K.றொபின்சன் |
| S.பிரபாகரன் | நாட.அரங்கியலும் | S.பிரபாகரன் |
| S.K.யூட் | கிறிஸ்தவம் | S.K.யூட் |
| S.அருள் | வரலாறு | S.சுஜீகரன் |
| A.அன்ரன் | விவசாயம் | A.அன்ரன் |
| T.தவசேகர் | புள்ளிவிவரவியல்/ கணிதம் | T.தவசேகர் |
| S.Jaisan | English | S.Jaisan |
| K.கலைச்செல்வன் | ICT | K.கலைச்செல்வன் |

NEC யில் ஆரம்பம்: காலை 8.30 மணி
நாவலரில் ஆரம்பம்: மாலை 3.00 மணி

அனுமதிகள் இன்று முதல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944


## ஊடகவியலாளர்களின் பரிதாப நிலை

இலங்கையில் தனியாருக்குச் சொந்தமான மிகப் பெரியதும், மக்கள் செல்வாக்கு மிக்கதுமான - இலத்திரனியல் ஊடக நிறுவனமான - மகாராஜா குழுமத்தின் எம்.ரி.வி., எம்.பி.சி. கட்டமைப்புகளின் பிரதான கலையகம் மீது செவ்வாய் அதிகாலை ஆயுதம் தாங்கிய அராஜகக் கும்பல் ஒன்று நடத்திய அட்டகாசத்தில் அந்தக் கலையகம் எரிந்து நாசமானது. அதனால் எழுந்த கரும் புகை மண்டலம் அடங்குவதற்குள், நேற்று கொழும்பு, இரத்மலானையில் 'த சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க, பட்டப்பகல் வேளையில் நட்டநடு வீதியில் வைத்து ஆயுததாரிகளால் சுடப்பட்டிருக்கின்றார். குண்டு மழையை எதிர்கொண்ட அவர், வைத்தியசாலையில் நீண்ட பலமணி நேர உயிர்ப் போராட்டத்தின் பின்னர் மரணமானார்.

யுத்தச் செயற்பாடுகளில் இருந்து அபிவிருத்தி நடவடிக்கைகள் வரை ஒவ்வொன்றிலும் அரசுத் தரப்பின் ஊழல்களை, அட்டூழியங்களை, கையாடல்களை, முறைகேடுகளைத் தமது வார வெளியீட்டில் தைரியத்துடன் தோலுரித்துக்காட்டி அம்பலப்படுத்தி வந்தவர் லஸந்த.

இராணுவ வெற்றி என்ற பெயரில் சிறுபான்மையினரான ஈழத் தமிழர்களின் மனம் புண்படும்படி தென்னிலங்கை எவ்வாறு நடந்து கொண்டது என்பதை மனம் நொந்து - விசனித்தபடி - தமது கடந்த வார ஆசிரியர் தலையங்கத்தில் விவரித்திருந்தார் அவர்.

ஆட்சிப் பீடத்தின் - அரசுத் தரப்பின் - முறைகேடுகளை அவர் புலனாய்வு செய்து துணிச்சலுடன் அக்குவேறு, ஆணிவேறாகப் புட்டுப் புட்டு வைத்து அம்பலப்படுத்தி வந்ததால் அரசியல் மற்றும் படைத் தலைமைகளுக்கு வேண்டாதவராக - சர்ச்சைக்குரியவராக - அவர் கருதப்பட்டார். அதுவே அவருக்கு வினையைத் தேடி - வாங்கி - தந்திருக்கின்றது.

கிளிநொச்சி வெற்றி மிதப்பைத் தொடர்ந்து தென்னிலங்கையில் கட்டவிழும் சம்பவங்கள் மக்களை - குறிப்பாகத் தமிழர்களை - பெரும் பதற்றத்துக்குள்ளும் சஞ்சலத்துக்குள்ளும் ஆழ்த்தியிருக்கின்றன.

எம்.ரி.வி. கலையகம் எரிக்கப்பட்டு அடுத்த நாள் புலிகள் இயக்கத்துக்குத் தடை விதிக்கும் அறிவிப்பு வெளியிடப்பட்டது. அப்போதே இத்தடை நடவடிக்கையின் பெறுபேறு - விளைவு - எப்படி இருக்கப்போகின்றது என்ற சந்தேகமும் கிளப்பப்பட்டது.

புலிகள் இயக்கத்தைப் பொறுத்தவரை அதற்கு எதிரான சகல நடவடிக்கைகளையும் இலங்கை அரசு முழு அளவிலே ஆரம்பித்து நீண்ட காலமாகி விட்டது. எனவே உத்தியோகபூர்வமாகத் தடை என்ற ஓர் அறிவிப்பைப் புதிதாக - பலத்த ஆரவாரத்துடன் - இலங்கை அரசு எடுத்தாலும் புலிகளுக்கு அதனால் புதிய நெருக்கடி ஒன்றும் ஏற்பட்டுவிட மாட்டாது என்பது தெளிவு.

ஆக, இந்தத் தடை உத்தரவால், ஊடகவியலாளர்களுக்குத்தான் நெருக்கடி நேரும் என்று கருதப்படுகின்றது. புலிகள் பற்றிய செய்திகள், விவரங்களை வெளியிடுவோர், ஊடகவியலாளர் என்ற முறையில் புலிகளுடன் தொடர்பாடலைப் பேணும் பத்திரிகையாளர்கள் போன்றோரை புலித்தடை என்ற - பொதுசனப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழான - வர்த்தமானி அறிவித்தல் மூலம் மடக்குவது ஒன்றுதான் இத்தடை மூலம் அரசுத் தரப்புச் செய்யக்கூடிய விவகாரமாகும்.

எனவே, எம்.ரி.வி. கலையகம் மீதான கொடூர அராஜகம், புலிகள் மீதான தடை என்ற அரசின் அறிவிப்பு, 'த சண்டே லீடர்' ஆசிரியர் நட்டநடு வீதியில் சுடப்பட்டமை போன்றவை இலங்கையில் ஊடக சுதந்திரம் மீள முடியாத பெரும் இக்கட்டுக்குள் சிக்கத் தொடங்கி விட்டது என்பதைக் கோடி காட்டுகின்றன.

இதையே கொழும்புக்கான அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக்கும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இலங்கையில் ஊடகப் பணி என்பது மிகவும் ஆபத்தானது என்று தெரிவித்துள்ள அவர், ஆனால் இலங்கையின் இனப் பிணக்கின் அடிப்படைக் காரணங்களை - மூலங்களை - வெளிப்படுத்தி, அம்பலப்படுத்தி, அடையாளப்படுத்தி மக்களுக்குக் காட்டுவதன் மூலம் அவற்றுக்கான தீர்வை எட்டுவதற்கு ஊடகவியலாளர்களே உதவ முடியும் என்றும் , இதனால் தீர்வுக்கான திறப்பு அவர்களிடமே உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நல்லாட்சியை உறுதிப்படுத்தல், எல்லா சமூகங்களும் முழு அளவில் பங்குபற்றக்கூடியதான சமுதாயத்தைக் கட்டி எழுப்புதல், ஜனநாயகம், வெளிப்படையான கருத்துப் பரிமாற்றத்துக்கு வழி வகுத்தல் போன்றவற்றில் சுயாதீனமான - சுதந்திரமான - ஊடகத்துறை அதிகளவில் பங்காற்ற முடியும் என்றும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

ஊடகவியலாளன் என்ற முறையில் அத்தகைய அதிக பங்களிப்பை ஆற்ற முயன்ற 'குற்றத்துக்காக' துப்பாக்கிக் குண்டுகளை விருதுகளாகவும், பதக்கங்களாகவும் பெற்றிருக்கின்றார் 'த சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க.

அந்தத் துணிச்சலான பேனாப் போராளியை நீதியான - நியாயமான - முறையில் எதிர்கொள்ளத் திராணியில்லாத அதிகாரத்தின் அரூபக் கரங்கள், கோழைத்தனமாகத் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்துவிட்டுத் தம்மை ஒளித்து, மறைத்துக்கொண்டு கொக்கரிக்கின்றன.

'பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்' என்று பாரதி குறிப்பிட்ட கூற்று இங்கு நிஜமாகின்றதோ........!

# கொழும்பில் இருந்து குடாநாட்டுக்கு விமானம் மூலம் மரக்கறிகள் வந்தன

## யாழ். கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் விற்பனை

யாழ்ப்பாணம், ஜன.09

யாழ. பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் பச்சை மிளகாய், கத்தரிக்காய், இஞ்சி என்பனவற்றைக் கொழும்பில் இருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வந்துள்ளது.

தம்புள்ளவில் கொள்வனவு செய்யப்பட்ட இந்தப் பொருள்கள் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து விமானம் மூலம் யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்தப் பொருள்கள் நேற்று வியாழக்கிழமை முதல் யாழ்.ப.நோ.கூ. சங்கக் கிளைகள் மற்றும் 'கோப் சிற்றி'கள் மூலம் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுவதாகச் சங்கத் தலைவர் தெரிவித்தார்.

கத்தரிக்காய் ஒரு கிலோ 180 ரூபாவாகவும் பச்சைமிளகாய் ஒருகிலோ 750 ரூபாவாகவும், இஞ்சி ஒரு கிலோ 850 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் இவற்றைத் தத்தமது கிளைகளில் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை -

மற்றுமொரு தொகுதி மரக்கறி வகைகள் இன்று வெள்ளிக்கிழமை விமானம் மூலம் எடுத்துவரப்படுவதாகவும் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. இவற்றில் தக்காளிப்பழம், போஞ்சி, பீற்றூட், கரட், மஞ்சள் என்பன அடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (50-224)

## வடமராட்சிப் பாடசாலைகளின் அதிபர்களின் கவனத்துக்கு

வடமராட்சி வலயப் பாடசாலைகளின் வலைப்பந்து, பட்மின்ரன், மேசைப்பந்து, துடுப்பாட்டம் (ஆண்கள், பெண்கள்) ஆகிய போட்டிகளின் நிரல் தயாரிப்பு எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலுள்ள ஆசிரியர் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

போட்டி நிரல் தயாரிப்பு பொறுப்பாசிரியரை பாடசாலை அதிபர்கள் தவறாது அனுப்பி வைக்குமாறு வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் வே.வல்லிபுரம் அறிவித்துள்ளார்.

கல்வி அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் பாடசாலை இல்ல மெய்வன்மைப் போட்டிகள் 08.02.2009 இற்கு முன்னரும் வலய மட்ட மெய்வன்மைப் போட்டிகள் 08.03.2009 இற்கு முன்னரும் நடத்தி முடிக்க வேண்டுமென வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். அதிபர்கள் அதற்கு ஏற்றவாறு போட்டிகளின் ஆயத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் திருவாதிரைத் தேர்த் திருவிழா இன்று

யாழ்ப்பாணம், ஜன.9

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தின் திருவாதிரைத் தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

கடந்த [illegible]லாம் திகதி வியாழக்கிழமை திருவாதிரைத் திருவிழா ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தினமும் அதிகாலை 5 மணிக்கு பூசை, திருப்பள்ளியெழுச்சியுடன் திருவிழா ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று இரவு 2மணி தொடக்கம் நடேசர் அபிசேகமும் நாளை சனிக்கிழமை அதிகாலை 6 மணிக்கு நடேசர் ஆருத்திரா தரிசனமும் இடம்பெறவுள்ளன.

நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திருவூடல் உற்சவம் இடம்பெற்றுத் தொடர்ந்து தீர்த்தத் திருவிழா இடம்பெறும்.

ஆலயத்திற்குச் செல்லும் பக்தர்களின் நலனைக் கருத்திற்கொண்டு யாழ்.பஸ்தரிப்பு நிலையத்திலிருந்து ஆலயம்வரை நேரடி பஸ்சேவைகளை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

ஆலயச் சூழலில் உள்ள அறப்பணி நிலையம், மணிவாசகர் மடாலயம் என்பவற்றில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைநகர் பிரதேச சபையினரும் சுகாதாரப் பகுதியினரும் இணைந்து குடி தண்ணீர் சுகாதாரம், பாதுகாப்பு உள்ளிட்ட பணிகளை மேற்கொண்டு வருகின்றன.

(203-250)

(சிறப்பிதழ் 8 ஆம் 9 ஆம் பக் கங்களில்)

## தொண்டர் ஆசிரியர்களின் போராட்டம் இரண்டாவது நாளாகவும் தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஜன.9

நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கற்பிக்கும் தொண்டர் ஆசிரியர்கள் யாழ்.வலயக் கல்வி அலுவலகம் முன்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பித்த கவனஈர்ப்புப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

நேற்றுக்காலை அலுவலகத்துக்கு முன்பாகக் கூடிய தொண்டர் ஆசிரியர்கள் மாலை வரை அமைதியான முறையில் தமது போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

தமது போராட்டம் தொடர்பாக உரிய அதிகாரிகள் இதுவரை எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லையென அவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனவே எமது இந்தக் கவனஈர்ப்புப் போராட்டம் கருத்தில் கொள்ளப்படாவிட்டால் தாம் தொடர்ந்து காத்திரமான நடவடிக்கைகளில் ஈடுபடவுள்ளனர் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (50)

## யாழ்ப்பாணம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்களுக்கு

நல்லூர்,ஜன.9

முதலாம் தவணைக்கென பாடசாலைகள் ஆரம்பமான திகதியிலிருந்து இன்று வெள்ளிக்கிழமை வரையுள்ள ஐந்து நாள்களுக்கான மேற்பார்வை அறிக்கையுடன் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு வருகை தருமாறு உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோரை யாழ். வலய கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (202-111)

## வாழ்வகம் நிறுவுநரின் உதயநாளும் பரிசுத் தினமும்

யாழ்ப்பாணம், ஜன.9

வாழ்வகம் நடத்தும் நிறுவுநர் உதய நாளும், பரிசுத் தினமும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சுன்னாகம், சபாபதிப் பிள்ளை வீதியில் அமைநதுள்ள வாழ்வகத்தில் நடைபெறவுள்ளன.

வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், 'நிக்கொட்' நிறுவன செயற்றிட்ட அதிகாரி இ.சிவரூபன் ஆகியோர் கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பழை யூனியன் கல்லூரி அதிபர் ந.புண்ணியசீலன், இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி ஆனந்தி சிவஞானசுந்தரம் ஆகியோர் கலந்து கொள்வர். (50-204)

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 26 | 10.01.2009 |
| | சனிக்கிழமை |
| திதி: | சதுர்த்தசி |
| | பி.ப.12.36வரை |
| நட்சத்திரம்: | திருவாதிரை |
| | மு.இ.10.28வரை |
| சுபநேரம்: | 03.33 - 05.03 |
| [illegible] | [illegible] |

## பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு உதவி

### யாழ்.ப.நோ.கூட்டுறவுச் சங்கம் வழங்குகிறது



யாழ்ப்பாணம், ஜன.09

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நலிவுற்றோர் அபிவிருத்தித் திட்ட நிதியிலிருந்து பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாகச் சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

அடிப்படை வசதிகள் இல்லாத நிலையில் இயங்கிவரும் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்குத் தேவையான குடிதண்ணீர், மலசல கூடம், மின் இணைப்பு வசதிகளே இந்தத் திட்டத்தின் கீழ் ஏற்படுத்திக்கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

எதுவித அடிப்படை வசதிகளும் இல்லாத நிலையில் காணப்படும் இந்தக் கலாசாலையின் தேவைகளை நிறைவு செய்து தருமாறு அதன் அதிபர் யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதனையடுத்தே அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்குச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதன் முதற்கட்டமாக மின் இணைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கான ஒரு தொகுதி மின்சார உபகரணங்களைச் சங்கத்தின் தலைவர் ப.கிரிதரன் கலாசாலை அதிபர் எம்.இக்னேசியஸிடம் அண்மையில் வழங்கினார்.

சிறிய கட்டடம் ஒன்றில் இயங்கி வரும் இந்தக் கலாசாலையில் குடி தண்ணீர் வசதியில்லை. வேறு இடத்தில் இருந்தே குடிதண்ணீரைப் பெற வேண்டியுள்ளது. அத்துடன் மலசல கூட வசதிகளும் போதுமானதாக இல்லை. இங்கு தற்போது 19 மாணவர்கள் ஆங்கிலக்கற்கை நெறியை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் 12 விரிவுரையாளர்கள் பணியாற்றுகின்றனர்.

கலாசாலைக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு பல தடவைகள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டபோதும் எவ்வித உதவிகளும் கிடைக்கவில்லை எனவும் கூறப்பட்டது.

(50-224)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலையால் அழிவடைந்த பவளப் பாறைகள் எதிர்பார்த்ததைவிட வேகமாக வளர்கின்றன

சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பவளப்பாறைகள் உட்பட கடலின் இயற்கை வளங்கள் அனைத்தும் பெருமளவில் அழிவடைந்தன. ஆனால் பவளப் பாறைகள் எதிர் பார்க்கப்பட்டதைவிட வேகமாக வளர்ந்து வருகின்றன என்று விஞ்ஞானிகள் தகவல் வெளியிட்டுள்ளனர். இந்தோனேசியக் கடற்பரப்பில் பவளப்பாறைகள் வேகமாக வளர்ந்து வருவதற்கு ஆதாரங்கள் கிடைத்திருப்பதாக நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டியங்கும் வன உயிர் பாதுகாப்புச் சங்கம் தெரிவித்துள்ளது.

இயற்கையின் வலிமையை, பாதிப்புகளிலிருந்து மீளும் அதன் உறுதியை எடுத்துக்காட்டுவதாக இது அமைந்திருக் கின்றது என வன உயிர்சங்கத்தின் இந்தோனேசிய கடற்பகுதி ஆராய்ச்சிகளின் ஒருங்கிணைப்பாளர் ஸ்ருவோட் கம்பெல் தெரிவித்திருக்கின்றார்.

புவி வெப்பமடைவதால் பவளப்பாறைகளில் ஏற்படும் பாதிப்புக்களைச் சமாளிக்க இந்தப் புதிய ஆராய்ச்சியில் கிடைத்திருக்கின்ற விவரங்கள் உதவும் என்றும் ஸ்ருவோட் கம்பெல் தெரிவித்திருக்கின்றார்.

சுமார் 100 சதுரகிலோமீற்றர் பரப்பளவிலான பவளப்பாறைகள் இலங்கையின் மன்னார் கடற்பரப்பில் பவளப்பாறைகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளன. இந்தப் பவளப் பாறைகள் பல ஆண்டுகளுக்கு முன்பு வெட்டி எடுக்கப்பட்டுள்ளன. எனினும் இவ்வாறு எடுக்கப்பட்ட இடங்களில் 5 சதவீத வளர்ச்சி இருப்பதாக கடந்த மூன்று ஆண்டுகளாக நடத்தப்பட்ட ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாக மன்னார் வளைகுடா சரணாலயத்தின் வன உயிர்க்காப்பாளர் செண்பகமூர்த்தி தெரிவித்தார். (202-119)

# நிகழ்வுகள்

பண்ணாலை திருவெம்பாவை கூட்டுப் பிரார்த்தனைச் சபையின் 69 ஆவது ஆண்டு விழாவும், கணேசா அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் பரிசில் வழங்கலும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சிவபூதவராயர் ஆலய மடத்தில் நடைபெறவுள்ளன.

நா.திருபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், இந்து சமய கலாசார அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும், சைவப்புலவர் ந.நித்தியதசீதரன், சித்தாந்த பண்டிதர் பிரம்மஸ்ரீ ஸர்மாஜி, பன்னாலை கிராம அலுவலர் ச.சிவகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

* * *

ஸ்ரீமத்சுவாமி விவேகானந்தரின் 147 ஆவது ஜன்மதின நிகழ்வு எதிர்வரும் 17 ஆம் திகதி பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முற்பகல் 10.30 மணிக்கு பஜனையும், 11.30 மணிக்கு விசேட பூசையும் நடைபெறும். (204)

## கண்ணீர் அஞ்சலி



**அமரர் நாகலிங்கம் கந்தசாமி**

(இ.ச.பேரம்பலம் அன்கோ (முகாமையாளர், யாழ்ப்பாணம்)

அவர்கள் (06.01.2009) அன்று காலமானதையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உதயா ஜுவெல்லர்ஸ், உரிமையாளரும், ஊழியர்களும்,
இல.81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது ஆலயத்தின் ஆயுள்கால உறுப்பினரும் அம்பாளின் திருப்பணி வேலைகளில் முன்னின்று உழைத்து வசந்தமண்டபம், கல்யாண மண்டபம் ஆகியவற்றை அமைப்பதற்கு அயராது பாடுபட்டவர்களில் ஒருவருமான

**அமரர் க.நித்தியானந்தன்**

அவர்கள் இந்தியாவில் மரணமான செய்திகேட்டு நாம் மிகவும் வேதனையுறுகிறோம். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபையினரின் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலனசபை,
இருபாலை கட்டப்பிராய் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்.

# யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட விரிவுரைகள்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட புகுமுக மாணவர்களுக்கான விரிவுரைகள் வழமைபோல் குறிப்பிட்ட நேர அட்டவணைப்படி நடைபெறும் என கலைப் பீடாதிபதி பேராசியர் சோ.கிருஷ்ணரஜா அறிவித்துள்ளார்.

(202)

## தவறிவிட்டது

சென். பற்றிக்ஸ் வீதி, மத்தியூஸ் வீதி, பிரதான வீதி, இராசாவின் தோட்ட வீதி, ஆஸ்பத்திரிவீதி ஆகியவற்றிற்கு இடையில் பிரயாணம் செய்கையில் 3 பவுண் எடையுடைய கைச்செயின் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் முகவரியின் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

இல.40, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.060 221 0699

## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA பேட்டுக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 10.01.09 விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

றாஜீவ்,
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

## யாழ்ப்பாணம் பொருளியலாளர் சங்கம் வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி யாழ்ப்பாணம் பொருளியலாளர் சங்க அங்கத்தவர்களான யாழ்ப்பாண பல்கலைக்கழக முதுகலைமாணி அபிவிருத்திக் கற்கைநெறி 1ஆம் அணி மாணவர்கள் அனைவரையும் சங்க வருடாந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இடம்: யாழ்.பல்கலைக்கழகம் பொருளியற்துறை மண்டபம்
காலம்: 10.01.2009 (சனிக்கிழமை)
நேரம்: மு.ப. 11 மணி

## இரண்டாம் கட்ட சீனி விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன.9

வலி.கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தால் 2 ஆம் கட்ட சீனி விநியோகம் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் நடைபெறவுள்ளது.

ஒன்று தொடக்கம் 2 அங்கத்தவர் கொண்ட குடும்பங்களுக்கு ஒரு கிலோவும், 3 தொடக்கம் 4 அங்கத்தவர் கொண்ட குடும்பங்களுக்கு ஒன்றரைக் கிலோவும், 5 அங்கத்தவர்களுக்கு அதற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு 2 கிலோவும் என்ற அடிப்படையில் சீனி விநியோகிக்கப்படவுள்ளது.

(204)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 11 | 01 |
| ★ | ★ |
| 03 | 01 |
| ★ | ★ |
| 1940 | 2007 |

திதி: 09.01.2009

**அமரர் நடராசா சிதம்பரநாதன்**

நீங்கள் எம்மை விட்டுச் சென்ற
நாள்களை
கண்ணீருடன் எண்ணிப் பார்க்கின்றோம்
கடவுளிடம் பிரார்த்திக்கின்றோம்
உங்கள் ஆத்மா சாந்திக்காக.

இல.9/3, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

மகள்,
மருமகன்.

## மரண அறிவித்தல்

### இராயப்பு சூசைப்பிள்ளை



பாஷையூரைச் சேர்ந்த இராயப்பு சூசைப்பிள்ளை (R.S பாபு) 03.01.2009 சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (10.01.2009) சனிக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மனைவி: கிளாறம்மா (சின்னமலர்),
மகன்மார்: சுரேஸ், யதீஸ், மதன்பாபு, எமில்ரன், சுதர்ஷன்
மருமகன்மார்: பபியன், ரெம்சி, வசந்தன், பாபு.

17/3, முதலாம் குறுக்குத்தெரு,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

## நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும்



| அன்னை மடியில் | அம்பாள் அடியில் |
|---|---|
| 28 | 10 |
| ★ | ★ |
| 06 | 12 |
| ★ | ★ |
| 1938 | 2008 |

**திருமதி மீனாட்சியம்மா சந்திரசேகரம்**

[ஓய்வுபெற்ற ஆசிரியை,
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, கரவெட்டி]

அன்பின் திருவுருவே ஆரணங்கே குடும்ப ஒளி விளக்கே!
மாணவ உலகின் மகுடமே! தூண்டா மணிச்சுடரே!
கல்வியாளர் தம் கருத்திற்கு களம் தந்தவரே!
கண்ணியமான கடமையில் கடவுளைத் தரிசித்தீர்!
ஒண்பொருளாம் ஒழுக்கமதனை உணர்வுடன் தந்த தாயே!
நீங்கள் உயர்த்தியது துன்ப வேற்றின் உள்ளங்களை
அதனால் தான் ....
அவர்கள் உள்ளங்களில் தனியான இடம்
உங்களுக்காகவே இருந்தது!
நோய் நொடி இன்றி வாழ்ந்த உங்களை மாய்த்துக்கொள்ள
கூற்றுவன் தாங்கிய மாயவடிவோ "கான்சர்"
அம்மையே! நீங்கள் மடியவில்லை
எங்களிடம் இருந்து மறைந்திருக்கிறீர்கள் ஏனெனில்
உங்களின் ஆன்மா அம்பிகையின் பாதமலரை
இடையறாது சேவிப்பதற்காக!
நாம் இடையறாது இறைஞ்சுகின்றோம் உங்கள்
ஆன்மா சாந்தி பெற
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரது வீட்டுக்கிருத்தியம் இன்று (09.01.2009) வெள்ளிக்கிழமை அதிகாலை 5 மணியளவில் எமது இல்லத்தில் நிகழவுள்ளமையால் அந்த நிகழ்விலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

[illegible], அல்வாய். (சி/556023) குடும்பத்தினர்.


O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான...
DMI வழங்கும் அங்கீகரிக்கப்பட்ட கணினி டிப்ளோமா சான்றிதழ்கான கற்கைநெறிகள்.


Diploma in Microsoft Office
Diploma in PC Application
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip. in Video Production & Multimedia
Dip. in Computerized Accounting
#Quick Books # Accpack # MYOB
JOIN WITH LEADERS IN ACCOUNTS
Tally Accounting Training




இலவச பாடநூல் மற்றும் இலகு தவணைக் கட்டணவசதி.
முழுமையானதும் தரமானதுமான கணினிக் கல்வி.
DMI COMPUTER EDUCATION
NO. 113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சங்கானைக் கல்விக் கோட்டத்தில் தரம்-5 புலமைப் பரிசிலில் சித்திபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் விழா அண்மையில் வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

விழாவில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை மாணவர்களின் பாண்ட்வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்களும் விழாநாயகர்களும் அழைத்துவரப்படுவதை முதலாவது படத்திலும்-

புலமைப் பரிசிலில் தேசிய ரீதியில் தமிழ் மொழி மூலத்தில் முதலிடம் பெற்ற வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவன் த.பாசுபதனுக்கு வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். கௌரவிப்புப் பெற்ற மாணவர்கள் விருந்தினர்களுடன் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்தில் காணலாம்.

*(படங்கள்: சித்தங்கேணிச் செய்தியாளர்)*

## தேசிய டிப்ளோமா தரப் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், ஜன.9

தொழில்நுட்பக் கல்வி, பயிற்சித் திணைக்களம் தேசிய டிப்ளோமாத் தரப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்.தொழில்நுட்பவியல் கல்லூரி, இரத்மலானை தேசிய தொழில்நுட்பக் கல்வி நிறுவனம், வாழ்க்கைக் கைத்தொழில், தொழில்நுட்பவியல் பல்கலைக் கழகம் ஆகியன இணைந்து பயிற்சிநெறிகளை நடத்தவுள்ளன.

ஜி.சீ.ஈ.உயர்தரத்தில் 2 அல்லது 3 பாடங்களில் சித்திபெற்ற மாணவர்கள் இக்கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

தேசிய டிப்ளோமா தர கணித அளவியல், தேசிய டிப்ளோமா தர குடிசார் எந்திரவியல், தேசிய டிப்ளோமா தர மின்னியலும் இலத்திரனியலும், சான்றிதழ் தர தன்னியக்க எந்திரவியல், டிப்ளோமா தர தன்னியக்க எந்திரவியல்.

உயர்தர வர்த்தகத்துறை ஆங்கிலம், டிப்ளோமா தர வர்த்தகமும் சந்தைப்படுத்தலும், டிப்ளோமா தர கணக்கியல், டிப்ளோமா தர ஒப்பனைக்கலை, டிப்ளோமா மனையியலும் வீட்டு உள்ளக அலங்காரமும் ஆகியன பயிற்சி நெறிகளே நடத்தப்படவுள்ளன.

மேலதிக விவரங்களை யாழ்.பிறவுண் வீதியில் அமைந்துள்ள யாழ்.தொழில் நுட்பக் கல்லூரியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். (202)

## கலந்துரையாடல்

வடமராட்சி, ஜன.9

முன்பள்ளிகள், சனசமூக நிலையங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு பருத்தித்துறைப் பிரதேச சபை மண்டபத்தில், அதன் செயலாளர் ச.சந்திரயோகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

முன்பள்ளிகள், சனசமூக நிலையங்கள் தொடர்பான தேவைகள், பிரச்சினைகளை கேட்டறிந்து பரிகாரம் காண உயர் அதிகாரிகள் கலந்து கொள்ளும் இக் கலந்துரையாடலில் சம்பந்தப்பட்டோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-236)

## 'விக்ரம்- ராஜன்- கங்கு' ஞாபகார்த்த கிரிக்கெட் போட்டி நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன.9

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம் நடத்தும் 'விக்ரம்-ராஜன்- கங்கு' ஞாபகார்த்த மட்டுப்படுத்தப்பட்ட பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டி நாளை சனிக்கிழமை ஆரம்பமாகின்றது. நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமையும், மறுநாள் சனிக்கிழமையும் இந்தப் போட்டி தொடர்ந்து நடைபெறும்.

நாளை காலை 8.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து யாழ்.பல்கலைக் கழக வின ளயாட்டுக் கழகமும், பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகமும், பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் மானிப் பாய் பரிஷ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

எதிர்வரும் 17ஆம் திகதி காலை 8.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகமும், பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (50)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## குடாநாட்டின் கல்வித்துறையில் நிலவும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.9

யாழ்ப்பாணத்தில் மத்திய அரசின் கீழ் உள்ள பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாகக் கல்வியமைச்சர் சுசில்பிரேம ஜயந்தவுடனும், மாகாண அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பாக மாகாண அமைச்சின் அதிகாரிகளுடனும் கலந்துரையாடித் தீர்வு காண்பதென முடிவு செய்யப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் கல்வித்துறையில் நிலவும் பிரச்சினைகள் குறித்து கடந்த 6ஆம் திகதி வலயக் கல்விப் பணிப்பாளர்கள், சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச் சரும் வடமாகாண விசேட செயலணித் தலைவருமான கே.என்.டக்ளஸ் தேவானந் தாவைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஆசிரியர் நியமனங்கள், ஆசிரியர் பற்றாக்குறை, இடமாற்றங்கள், தேசிய மற்றும் மாகாணப் பாடசாலைகளில் மாணவர்களை அனுமதித்தல், கல்விசாரா ஊழியர்களின் பற்றாக்குறை, பாடசாலைகளுக்கான இதர வசதிகள் தொடர்பாக இந்தக் கலந்துரையாடலின்போது ஆராயப்பட்டது.

## திருவாசக முற்றோதல் நிகழ்வுகள்

வடமராட்சி, ஜன.9

நாட்டில் சாந்தியும், சமாதானமும் வேண்டி பருத்தித்துறை பிரதேசத்தில் இடம்பெற்றுவரும் திருவாசக முற்றோதல் வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை அல்வாய், திக்கம் நாச்சியம்மன் கோயிலிலும், நாளை சனிக்கிழமை திக்கம் மடத்துவாசல் பிள்ளையார் கோவிலிலும், நாளை மறுதினம் 11ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நெல்லண்டை வீரமாகாளி அம்மன் கோயிலிலும் திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளது.

மேலைப்புலோலி சதாவதானி கதிரைவேற்பிள்ளை சனசமூகநிலையம், அறநெறிப் பாடசாலை ஆகியவற்றைச் சேர்ந்த ஓதுவார் குழுவினர் திருவாசக முற்றோதலை ஓதி வருகிறார்கள். (202-236)

* * *

சித்தங்கேணி, ஜன.9

சங்கானை சிலம்புப்புளியடி ஞானவைரவர் ஆலயத்தில் இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு விசேட பூசைகளுடன் திருவாசக முற்றோதல் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது. (112)

* * *

சங்கானை இலுப்பைத் தாழ்வு முருக மூர்த்தி ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு திருவாசக முற்றோதல் இடம்பெறவுள்ளது. (112)

* * *

திருநெல்வேலி பழங்கிணற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் நாளை சனிக்கிழமை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் திருவாசக முற்றோதல் இடம்பெறும். (202)

## சித்திவிநாயகர் வித்தியாலய மாணவர்களுக்கு உதவி

வடமராட்சி, ஜன.9

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயத்தில் கல்விபயிலும் தந்தையரை இழந்த 19 மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு பழைய மாணவர் சங்கம் உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

பாடசாலைத் தவணை ஆரம்பத்தில் இம்மாணவர்களுக்குத் தேவையான கற்றல் உபகரணங்களை வழங்கவும், சீருடைகளைத் தைத்துக் கொடுக்கவும் பழைய மாணவர் சங்கம் உரிய நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொண்டு வருகின்றது. (202-236)

## கரவெட்டிப் பிரதேச சபைப் பகுதியில் கிணறுகளை இறைக்கும் பணி தீவிரம்

வடமராட்சி, ஜன.9

கரவெட்டி வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைப் பகுதியில் கிணறுகளை இறைத்து சுத்தம் செய்யும் பணி வேகமாக நடைபெற்று வருகிறது.

அண்மையில் குடாநாட்டில் ஏற்பட்ட 'நிஷா' புயல், மழை காரணமாக குடிதண்ணீர்க் கிணறுகள் அசுத்தமடைந்தன. இதன் மூலம் மக்கள் மத்தியில் தொற்றுநோய்கள் ஏற்படாமல் பாதுகாக்கும் பொருட்டு யாழ். பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களம் குடிதண்ணீர் கிணறுகளை இறைத்துச் சுத்தம் செய்யுமாறு உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிவுறுத்தியிருந்தது.

இதையடுத்து வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைப் பகுதியில் உள்ள பொதுக் கிணறுகள் பிரதேச சபையினால் இறைத்துச் சுத்தம் செய்யப்பட்டு வருகின்றன. அத்துடன், தனியாரின் குடிதண்ணீர்க் கிணறுகளை இறைத்துச் சுத்தம் செய்ய நீரிறைக்கும் இயந்திரத்திற்குத் தேவையான மண்எண்ணெய் அவர்களிடமிருந்து பெறப்பட்டுகுடிதண்ணீர்க் கிணறுகள் இறைத் துச்சுத்தம் செய்யப்படுகின்றன. (202-236)

## நீர்வேலியில் கடந்த போகத்தில் மேற்கொண்ட பம்பாய் வெங்காயச் செய்கை வெற்றி

யாழ்ப்பாணம், ஜன.9

கடந்த போகத்தில் நீர்வேலி பகுதியில் சில விவசாயிகள் மேற்கொண்ட பம்பாய் வெங்காய செய்கை அதிக விளைச்சலை ஈட்டிக் கொடுத்துள்ளது.

பரீட்சார்த்தமாக சில விவசாயிகள் இந்த பம்பாய் வெங்காயச் செய்கையை மேற்கொண்டனர்.

எதிர்பார்த்ததை விட அதிக பயனை விவசாயிகள் இதில் பெறமுடிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த பரீட்சார்த்த பயிர்ச்செய்கை வெற்றியளித்துள்ளதால் எதிர்வரும் போகத்திலும் விவசாயிகள் இச்செய்கையை மேலும் விரிவு படுத்தவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (202-224)


வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க!
உலகநாடு → கொழும்பு → யாழ்ப்பாணத்திற்கான
துரித தபால்கள் பொதிகள் சேவை
ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
திருமுருகன் கொம் நெற்
New Branch
TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06
FedEx யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்


உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்குண்டு

சிறுவர் பாடசாலைக்குத் தேவையான கதிரை, மேசைகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0771350082


## மரண அறிவித்தல்

### நவரட்ணம் தர்மபாலன்

நேற்று (08.01.2009) வியாழக்கிழமை 6ஆம் பக்கத்தில் பிரசுரமான நவரட்ணம் தர்மபாலனின் மரண அறிவித்தலில் காலஞ்சென்றவர்களான காராளசிங்கம், சேனாதிராசா, தியாகராசா, செல்வராசா ஆகியோரின் மருமகனும் என்பதை காலஞ்சென்றவர்களான காராளசிங்கம், சேனாதிராசா, தியாகராசா மற்றும் செல்வராசா என திருத்தி வாசிக்குமாறு வேண்டுகின்றோம்

தகவல்:
க.சின்னத்தம்பி (மாணிக்கம்).
ஆனைக்கோட்டை.

# சிவத்தமிழ்ச் செல்வியின் நினைவாக மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்

நல்லூர்,ஜன.9

துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவாக புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் யாழ்.வலய கல்வி அலுவலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புலமைப்பரிசில் பெறுவதற்குத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் தமது பாடசாலையின் அதிபர்களுடன் பாடசாலைச் சீருடையில் கலந்து கொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். சுமார் 100 மாணவர்கள் புலமைப்பரிசிலுக்காகத் தெரிவாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(202-111)

## கண்ணீர் அஞ்சலி

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பயிற்சித் திட்டப் பணிப்பாளர் நாகலிங்கம் நித்தியானந்தன் அவர்களின் அன்புத் தாய்

### திருமதி அன்னம்மா நாகலிங்கம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி.
பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பணியாளர்கள், இல்லச்சிறார்கள்.
(சி/556559)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசம்மா கார்த்திகேசு



மயிலிட்டி தெற்கு, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் 144/6, பிறவுண் வீதி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்சில் வசித்தவருமாகிய திருமதி இராசம்மா கார்த்திகேசு நேற்று முன்தினம் (07.01.2009) புதன்கிழமை பிரான்சில் காலமானார்.

அன்னார் அமரர் கார்த்திகேசுவின் (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்கள்ான சிவபாக்கியம், தங்கராசா, துரைராசா மற்றும் செல்லம்மா (பிரான்ஸ்), அமரர் தியாகராசா மற்றும் பரஞ்சோதி, சண்முகராசா, கனகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் அருளம்பலம் மற்றும் அன்னலட்சுமி (ஜேர்மனி), அமரர் யோகேஸ்வரி மற்றும் முத்துக்குமாரு (பிரான்ஸ்), தவமணி (கனடா), கனகரட்ணம் ஆகியோரின் மைத்துனியும் அருள்தாஸ் (ஓய்வுபெற்ற ஆசிரியர், யாழ்.கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாலயம்), இரஞ்சிதமலர் (வத்தளை), கருணாநிதி (ஜேர்மன்), சாந்தமலர் (டென்மார்க்), சந்திரமலர், செல்வக்குமார் (பிரான்ஸ்), செல்வமலர் (பிரான்ஸ்), சிவசக்திமலர் (பிரான்ஸ்), முரளிதாஸ் (பிரான்ஸ்), உதயதாஸ் (லண்டன்) ஆகியோரின் அருமைத் தாயாரும் வரதலட்சுமி, அமரர் சிவஞானசுந்தரம் மற்றும் பவளமணி (ஜேர்மனி), இராஜசிங்கம் (டென்மார்க்), விவேகானந்தன் (கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர், வட்டுக்கோட்டை), கணேஸ்வரன் (பிரான்ஸ்), வசந்தா (பிரான்ஸ்), சந்திரசேகரம் (பிரான்ஸ்), சங்கீதா ஜான்சி (பிரான்ஸ்), தர்சினி (லண்டன்) ஆகியோரின் மாமியும் சிவசொரூபன், சிவதர்சன், சிவசந்திரிக்கா, சிவரஞ்சிதன், சியாம்சுந்தர், மகாசிவன்-சிவாணி, சியாம்சந்தர், சியாந்தினி, பிரசாத், பிரிந்தா, தர்மகுமார்-றிபேக்கா, பிரேம்குமார் -சங்கீதா, விஜேந்திரன்-சவீதா, சுரேக்கா, சபிதன், றதன், சுயந்தன், சர்மிளா, சஞ்சீவன், சுயித்தன், நிரோசன், நிசா, நிகிதா, அபிரா, அபிசன், அனுசன், டிலான், டிவேக், டிவான், கிசான், லக்ஸ் சிகா ஆகியோரின் பேர்த்தியும் கர்சினியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் செவ்வாய்க்கிழமை (13.01.2009) பரிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கா.அருள்தாஸ் (மகன், ஓய்வுபெற்ற ஆசிரியர்),
ந.விவேகானந்தன் (மருமகன்),
வி.சந்திரமலர் (மகள்)
144/6, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்).
0602216212

தொ.பே. இலக்கம்
0033164215049
பிரான்ஸ்.
(81653)

# பொங்கல் பொருள்கள் விநியோகம்

யாழ்ப்பாணம்,ஜன.9

புங்குடுதீவு, நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் அனைத்துக் கிளைகளிலும் கூட்டுறவு நகர் விற்பனை நிலையத்திலும் பொங்கல் பொருள்களைப் பெற்றுக்கொள்ளலாம் என சங்கத்தின் தலைவர் அறிவித்துள்ளார்.

(204)

# உதவிக் கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம்,ஜன.9

வலி.கிழக்கு கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் இந்த மாதத்திற்கான பொதுசன மாதாந்தக் கொடுப்பனவுகள், நோய் உதவிக் கொடுப்பனவுகள் என்பன தபாலகங்கள், உபதபாலகங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன. (204)

# துப்புரவுப் பணி

யாழ்ப்பாணம்,ஜன.9

நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது கொல்லப்பட்ட 10 தமிழ் மக்களின் நினைவாக முற்றவெளிப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நினைவாலயப் பகுதி துப்புரவு செய்யும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

நினைவாலயத்தைச் சுற்றி அடர்ந்து வளர்ந்திருக்கும் புற்கள் மற்றும் பற்றைகள் என்பன வெட்டி அழிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்.மாநகர சுகாதாரத் தொழிலாளிகள் துப்புரவுப் பணிகளைச் செய்து வருகின்றனர்.

மாநாட்டின்போது கொல்லப்பட்ட பத்துப் பொதுமக்களின் நினைவு தினம் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

(202-224)

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தின் காசாளர் அ.உருத்திரன் அவர்களின் பாசமிகு துணைவி

### திருமதி உருத்திரன் பத்மாவதி

அவர்கள் 07.01.2009 அன்று காலமானதையிட்டு துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர், ஊழியர்கள்
சிற்றி மெடிக்கல்ஸ், யாழ்ப்பாணம்.
(81662)

## மூன்றாண்டு நினைவஞ்சலி

மலர்வு 10 ✱ 07 ✱ 1964



மறைவு 11 ✱ 01 ✱ 2006

### அமரர் பழனி பசுபதி

திதி: திரயோதசி

அப்பா...
ஆறுதல் சொல்ல யார் இருந்தென்ன
அப்பா என்று சொல்ல எமக்கு யாருமில்லையே!
ஆண்டு மூன்றாயினும் ஆறாது எங்கள் மனம்
மகத்தான தந்தையே! மாறாது உங்கள் நினைவு
எத்தனை ஆண்டுகள் வந்தாலும் மறப்போமா உங்களை
உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கும்

பகுத்தறிவகம் லேன்,
அம்மன் வீதி, திருநெல்வேலி.
மனைவி,
பிள்ளைகள், மாமி.
(81660)


எனது மாணவச் செல்வங்களை ஆசியுடன் வாழ்த்துகின்றேன்

## ஆசிரியர் M.பத்மன் B.A.(Hons), His.spl.

### A/L பரீட்சை முடிவுகள் 2008 வரலாறு

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வினுசா நாராயணன் (மாவட்ட நிலை 02) | - A | துளசிகா யோகேஸ்வரன் | - A | நிஷாந்தினி கதிர்வேல் | - A |
| | | பிரதீபா ஸ்ரீஸ்கந்தராசா | - A | கார்த்திகா ராஜேஸ்வரன் | - A |
| அப்புக்குட்டி சர்வதீபன் | - A | சிவதாரணி சிவராஜன் | - A | சாந்தரூபி சாந்தமூர்த்தி | - A |
| சுகன்ஜா கணேசலிங்கம் | - A | பிரதீபா பார்த்தீபன் | - A | கம்ஷா சோதிராசா | - A |
| சிந்துஜா கனகரட்ணம் | - A | ராமலிங்கம் சந்திரபாலன் | - A | | |
| சங்கவை சிவானந்தம் | - A | சுகன்யா கோபாலபிள்ளை | - A | | |
| கவிதா ஜெகநாதன் | - A | தனுர்ஷியா இராசரத்தினம் | - A | | |
| சிபோஜா குணசீலன் | - A | மேகலா சிவசுப்பிரமணியம் | - A | | |

★ 32% 'A' சித்தி
★100% சித்தி

இவர்களுடன் 'B' தர சித்தி பெற்ற 26 மாணவர்களையும் மனமார வாழ்த்துகின்றேன். குறுகிய காலத்தில் வரலாறு பாடத்தை விரும்பித் தெரிவு செய்து கற்று 'A' சித்தியடைந்த எனது மாணவர்களை சிறப்பாகப் பாராட்டுகின்றேன்

இவ்வாசிரியர் கற்பிக்கும் இடங்கள்: DMI நாவலர் வீதி | யாழ்.கல்லூரி ஆனைக்கோட்டை | BITSMANS மானிப்பாய்


## மரண அறிவித்தல்



### ஆண்டி முருகையா

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் தியேட்டர் வீதி, இணுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஆண்டி முருகையா 07.01.2009 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் லக்சுமியின் அன்புக் கணவரும் ஆண்டி - வெள்ளச்சி அம்மா தம்பதியரின் இளைய மகனும் ஆறுமுகம் - வள்ளி தம்பதியரின் மருமகனும் கற்பகம், பொன்னி, சின்னாச்சி ஆகியோரின் சகோதரனும் இராசேந்திரம், சூரியகலா, நாகராணி (ஜேர்மனி), தேவிகா (சுவிஸ்), லேகா (ஹொலண்ட்), தெய்வேந்திரம் (சுவிஸ்), லதா (சுவிஸ்), அஜந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் இராதா, ஜெயசிங்கம் (இலங்கை மின்சாரசபை ஊழியர் சுன்னாகம்), பாஸ்கரன், தெய்வேந்திரம், பாலசந்திரன், சோபா, ஜீவானந்தன், கெங்காதரன் ஆகியோரின் மாமனும் றொபெக்ஷன், கம்சன் (யா/பரியோவான் கல்லூரி), லுக்ஷிகா (யா/சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), லக்கீர்த்தர் (யா/இணுவில் மத்திய கல்லூரி), தர்ஷன் (யா/இந்துக் கல்லூரி), குகப்பிரியன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), மதுசாளினி (யா/உடுவில் மகளிர் கல்லூரி), அனிதா, நஜிந்தன், அஜிந்தன், விந்தியா, விதுசாளன், ஜஸ்வந்தியா, மதுவந்தியா, ஆரிகா, பராபரன் ஆகியோரின் அன்புப் பேரனும் இராசா, தெய்வமணி, செல்வராணி, செல்வமணி ஆகியோரின் மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.01.2009) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தியேட்டர் வீதி,
இணுவில் கிழக்கு, இணுவில்.
(81663)
தகவல்: குடும்பத்தினர்.

## நினைவலைகள்

முதலாம் ஆண்டு



விஜயகாந்தன் ஜெயலட்சுமி
மண்ணில்: 11.02.1947
விண்ணில்: 22.12.2007

7ஆம் ஆண்டு



விசுவர் விஜயகாந்தன்
மண்ணில்: 24.12.1939
விண்ணில்: 23.12.2001

காலத்தை உணர்ந்த காரியமானவரே!
கண்களின் முன் உருவங்கள் மறைந்தாலும்
என்றென்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன் வாழும்....

[illegible]
(சி/556552)
பிள்ளைகள்: பாபு, றூபி, பாமினி,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அல்வாய் மனோகரா வி.க. சம்பியன்

கரவெட்டி,ஜன.9

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையினால் நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அல்வாய் மனோகரா அணி சம்பியனாகியது.

இந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 32 கழகங்கள் பங்குகொண்டன. இவற்றில் 'சுப்பர்' அணியில் 8 கழகங்கள் பங்குகொண்டன.

இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை வதிரி பொமேர்ஸ் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

மனோகரா விளையாட்டுக் கழகமும் பொமேர்ஸ் விளையாட்டுக் கழகமும் இறுதிப் போட்டியில் மோதிக்கொண்டன. விறுவிறுப்பான முறையில் இரு அணிகளும் தமது ஆட்டத்தை வெளிப்படுத்தின. எனினும் ஆட்டம் நிறைவடையும் வரை இரு அணிகளும் கோல் எதனையும் பெறமுடியவில்லை.

இதனையடுத்து சமநிலை தடுப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் மனோகரா விளையாட்டுக்கழக அணி 3:2 என்னும் கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இந்த உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் முதலாம் இடத்தை மனோகரா வி.கவும், இரண்டாம் இடத்தை பொமேர்ஸ் வி.கவும், மூன்றாம் இடத்தை சிவானந்தா வி.கவும் பெற்றுக்கொண்டன.

இந்தப் போட்டியில் பிரதம விருந்தினராக வைத்திய கலாநிதி ஏ.கேதீஸ்வரனும், சிறப்பு விருந்தினராகப் பருத்தித்துறை பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எம்.எஸ். பண்டார, பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.பிறேமானந்தா ஆகியோரும் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினார்கள். (50-70)

விருந்தினர்களுடன் வீரர்கள்



# புயல், மழையால் அழிவடைந்த பயன்தரு மரங்கள் மீள் நடுகை

மானிப்பாய்,ஜன.9

'நிஷா' புயல் மற்றும் கடும் மழையால் அழிவடைந்த பயன்தரு மரங்களுக்கு மாற்றீடாகப் புதிய மரங்களை உருவாக்கும் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பசுமைப் புரட்சியாளர் வை.செகரராஜசிங்கம் இத்திட்டத்தை முன்னெடுக்கவுள்ளார்.

இத்திட்டத்தை 3 ஆண்டுகளில் பூர்த்தி செய்து முடிக்கத் திட்டமிட்டுள்ளார்.

சமண்டலை, தேக்கு, சவுக்கு, மகோக்கனி, மலைவேம்பு மற்றும் பல பயன்தரு மரங்களை நாட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட விதையினங்கள் தேவைப்படுவோர் 021 222 3583 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (202-95)

# பொதுப்பணிகளில் மக்களின் பங்கேற்பு அருகி வருகின்றது

## ஊர்காவற்றுறை பிரதேச சபைச் செயலர் குறிப்பிடுகின்றார்

ஊர்காவற்றுறை,ஜன.9

பொதுப் பணிகளில் மக்களின் பங்கேற்பு படிப்படியாக அருகி வருகின்றது. சிறு பணிகளைக் கூட அரச திணைக்களங்களே நிறைவேற்றவேண்டும் என்ற எதிர்பார்ப்பு மேலோங்கியுள்ளது.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செயலாளர் ஏ.கணேசானந்தராஜா இவ்வாறு குறிப்பிட்டார்.

அண்மையில் ஊர்காவற்றுறை பொது நூலகத்தில் இடம்பெற்ற நூலக ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு:

ஒவ்வொருவரதும் வீட்டிற்கு முன்னால் செல்லும் வீதிகளில் சிறு பள்ளம் ஏற்படுகின்றபோது நாங்களே சிறிது மண்ணை போட்டு அதனை மூடிவிடலாம். ஆனால் எங்களால் அவ்வாறு செய்யமுடிவதில்லை. அது நாளடைவில் பாரிய குழிகளானதும் ஒட்டுமொத்த சமூகமும் இடர்படுவதும் பின்னர் அரச திணைக்களங்கள் அவற்றைத் திருத்தவேண்டும் என்று மகஜர் தயாரிப்பதும் வழமையாகிவிட்டன.

இன்று சனசமூக நிலையங்கள் போன்ற சமூக அமைப்புகள் செயலிழந்து போயுள்ளன. இதனால் பிரதேச அபிவிருத்தி குறித்து மக்களின் கருத்துக்களை அறியமுடியாமல் உள்ளன. அவற்றில் உள்ள சொத்துகள் கூட துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றன.

அரச திணைக்களங்களும் சமூக அமைப்புகளும் இணைந்து பணியாற்றுகின்றபோது பிரதேச அபிவிருத்தி துரிதப்படுத்தப்படும். அங்கு ஊழல், மோசடிகள் இடம்பெறுவதை இலகுவாகத் தடுக்கமுடியும். இந்த நூலகத்தை அபிவிருத்தி செய்யும் பொருட்டு புதிய கட்டடம் ஒன்றை நூலக பயன்பாட்டிற்கு அமைத்து வருகின்றோம். நூல்கள் கொள்வனவுக்கும், இந்திய சஞ்சிகைகள் வாங்குவதற்கும் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

வாசகர்கள் விரும்பினால் தொலைக்காட்சி வசதி, கணனி வசதி என்பனவும் செய்து கொடுக்கத் தயாராக உள்ளோம் - என்றார்.

பிரதம நூலகர் கு.வைகுந்தவாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பலரும் கலந்துகொண்டனர். (202-127)

# கிளிநொச்சியைப் பிடிப்பது என்பது ஜனாதிபதியின் பகற்கனவு என்றார்கள்; நாம் கைப்பற்றிவிட்டோம்

## புலிகள் மீண்டும் எழுச்சி பெறமுடியாது என்கிறார் இராணுவத் தளபதி

கொழும்பு,ஜன.9

புலிகளிடமிருந்து கிழக்கு வீழ்ந்தபோது தற்காலிக பின்னடைவு என்றார்கள். துணுக்காய், மல்லாவி படையினர் வசமான போதும் தற்காலிகப் பின்னடைவு என்றனர். கிளிநொச்சியை படையினர் நெருங்கும் போது, அது 'மரணத்தின் முத்தம்' என வர்ணித்தார்கள். கிளிநொச்சியை பிடிப்பது என்பது ஜனாதிபதியின் பகற்கனவு எனப் புலிகள் கூறினர். எனினும், நாம் கிளிநொச்சியைப் பிடித்திருக்கிறோம்.

- இவ்வாறு இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி வெற்றி தொடர்பாக தொலைக்காட்சிகளுக்கு ஒரே நேரத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை வழங்கிய விசேட பேட்டியொன்றிலேயே ஜெனரல் சரத் பொன்சேகா இதனைத் தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இவை அனைத்தையும் தற்காலிக பின்னடைவு என்று கூறமுடியாது. கட்டுப்பாட்டில் இருந்த நிலப் பிரதேசத்தில் 90 சதவீதமான பகுதிகள் இழக்கப்படுமானால் அதை தற்காலிக பின்னடைவென்றோ அல்லது தந்திரோபாய பின்வாங்கலென்றோ கூறமுடியாது. இது 10 அல்லது 20 சதவீதமாக இருந்திருந்தால் தந்திரோபாய பின்வாங்கலெனக் கூற முடியும்.

பிரபாகரன் மீண்டும் எழுச்சி பெறுவாரென்பது சிலரது கனவாக இருக்கிறது. அது பகற் கனவாகவே இருக்குமென நான் நம்புகிறேன். அதேநேரம், கடந்த இரண்டரை வருட கால யுத்தத்தில் 15 ஆயிரம் புலிகள் கொல்லப்பட்டுள்ளனர். இதில் கிழக்கில் 2 ஆயிரம் புலிகளும் யாழ்.குடாநாட்டு யுத்தத்தில் 1,500 புலிகளும் வடக்கின் ஏனைய பகுதிகளில் நடந்த மோதலில் 11 ஆயிரத்து 500 புலிகளும் கொல்லப்பட்டுள்ளனர். இந்தக் காலப்பகுதியில் சுமார் 2 ஆயிரம் படையினர் மட்டுமே உயிரிழந்திருக்கின்றனர்.

பெரியதொரு கெரில்லா இயக்கத்துடன் மோதும்போது உயிரிழப்புகளும், காயங்களும் இன்றி யுத்தம் செய்யமுடியாது. யுத்தத்தின்போது கெரில்லா ஒருவரைக் கொல்ல படையினரில் 10 பேர் உயிரிழக்க வேண்டிவரும் என்பதே உலகில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும். எனினும், எமது நடவடிக்கைகளைப் பொறுத்தவரையில் 5 கெரில்லாக்கள் சாகும்போது படையில் ஒருவரே உயிரிழக்கிறார் என்பது எமக்கு வெற்றிதானே." என்று கூறினார். (அ-சி)

# கூட்டம்

வலி.மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கும் பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கும் நடைபெறவுள்ளன.

இக்கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டு பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (202)

# கூட்டுறவுப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,ஜன.9

யாழ்.மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரியால் கூட்டுறவுப் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள இந்தப் பயிற்சி நெறியில் கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர கனிஷ்ட பிரிவு, சாதாரண பிரிவு, உயர் பிரிவு ஆகிய பிரிவு ரீதியாகப் பயிற்சி இடம்பெறும்.

எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை 'யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை, கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபக் கட்டடம், 2ஆம் மாடி, இல.12, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (204)

# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வறிய பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள்

நல்லூர்,ஜன.9

ஜே/108 நல்லூர் பிரிவில் 'நிஷா' புயல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வசதி குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களும் சேமிப்புச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

கிராம அலுவலர் திருமதி இராகினி இராமலிங்கத்தின் முயற்சியால் இவை வழங்கப்படவுள்ளன.

நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நல்லூர் முருகன் சனசமூக நிலையத்தில் வைத்து இவை வழங்கப்படவுள்ளன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் கலந்துகொள்வார். (202-111)

# கலைஞர் விவரம் திரட்டு

யாழ்ப்பாணம்,ஜன.9

தென்மராட்சிப் பிரதேச இசை மற்றும் கூத்துக் கலைஞர்களின் விவரங்கள் பிரதேச கலாசாரப் பிரிவினால் திரட்டப்படுகின்றன.

இசை மற்றும் கூத்து ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள பிரதேச கலைஞர்கள் கலாசாரப் பிரிவில் உரிய படிவத்தினைப் பெற்று பூர்த்திசெய்து எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் கையளிக்குமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார். (202-207)

# காரைநகர் மணிவாசகர் சபை நடத்திய போட்டிகளின் முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம்,ஜன.9

காரைநகர் மணிவாசகர் சபை கனடாவில் வெளிவரும் 'எனது ஊர் காரைநகர்' என்னும் காலாண்டு சஞ்சிகையின் ஆதரவுடன் மாணவர்களிடையே நடத்திய போட்டிகளின் முடிவுகள் வெளியாகியுள்ளன.

போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

**மனனப் போட்டி**

பிரிவு I:- செ.கீர்த்தனா (யாழ்ற்ரன் கல்லூரி), சிவப்பிரியா(யாழ்ற்ரன் கல்லூரி), அ.பிரணவரூபன்(சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்).

பிரிவு II:- செ.கமலேஸ்வரி(யாழ்ற்ரன் கல்லூரி), பா.கவிதா (யாழ்ற்ரன் கல்லூரி), கா.மதுரா (யாழ்ற்ரன் கல்லூரி), தெ.சுதனிகா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி).

பிரிவு III:- யு.லோஜிகா(யாழ்ற்ரன் கல்லூரி), கோ.குருசாந்தி(சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்), சி.சர்வணன் (யாழ்ற்ரன் கல்லூரி), சோ.கஜவல்லி (யாழ்ற்ரன் கல்லூரி).

பிரிவு IV:- ஞா.கலைச்செல்வி (யாழ்ற்ரன் கல்லூரி), நா.யதீஸ்வரி (வியாவில் சைவ தமிழ் வித்தியாசாலை), கி.சிவறஞ்சனா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி).

பிரிவு V:- தி.ஆரணி(யாழ்ற்ரன் கல்லூரி), சி.சிவநளினா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), மு.புவித்திரா (யாழ்ற்ரன் கல்லூரி).

பிரிவு VI:- பிறிந்தாமன் (யாழ்ற்ரன் கல்லூரி), க.கோகிலா (யாழ்ற்ரன் கல்லூரி), ம.குகப்பிரியா (யாழ்ற்ரன் கல்லூரி).

**பேச்சுப் போட்டி**

பிரிவு I:- செ.கீர்த்தனா (யாழ்ற்ரன் கல்லூரி), சே.பிரசாந்தன்(யாழ்ற்ரன் கல்லூரி), க.கீர்த்திகா (மெய்கண்டான் வித்தியாலயம்).

பிரிவு II:- த.குணதாசன் (யாழ்ற்ரன் கல்லூரி), சு.டிலக்சனா (காரை ஊரி.அ.மி.த.க.), சி.சிவறஞ்சன் (யாழ்ற்ரன் கல்லூரி),

பிரிவு III:- இ.கிருஷாந்தி(யாழ்ற்ரன் கல்லூரி), சு.மனோகரி(யாழ்ற்ரன் கல்லூரி), த.ஆரணி (யாழ்ற்ரன் கல்லூரி).

பிரிவு IV:- பா.கணேஸ்குமாரி (யாழ்ற்ரன் கல்லூரி), அ.ரேவதி (யாழ்ற்ரன் கல்லூரி), த.கௌரீதரன் (யாழ்ற்ரன் கல்லூரி).

பிரிவு V:- இ.பிருந்தா (யாழ்ற்ரன் கல்லூரி), கோ.மிரோஜா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), ந.ஞாஜினி (வியாவில் சைவ வித்தியாலயம்).

பிரிவு VI:- இ.பாலேந்திரன் (யாழ்ற்ரன் கல்லூரி), இ.சுகன்ஜா(யாழ்ற்ரன் கல்லூரி), க.ராகேஸ்வரி (யாழ்ற்ரன் கல்லூரி), ம.சாம்பவி(யாழ்ற்ரன் கல்லூரி).

**பண்ணிசைப் போட்டி**

பிரிவு I:- ஆ.அமிர்தா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), இ.பவானி(யாழ்ற்ரன் கல்லூரி), ச.ஜீவதாஸ் (யாழ்ற்ரன் கல்லூரி), இ.கல்யாணி(யாழ்ற்ரன் கல்லூரி).

பிரிவு II:- கி.துர்க்காயினி (சுந்தரமூர்த்தி நாயனார் வித்தியாலயம்), ம.காயத்திரி (யாழ்ற்ரன் கல்லூரி), ஆ.அருந்தா (கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.), இ.கல்யாணி (யாழ்ற்ரன் கல்லூரி).

பிரிவு III:- மா.சுதாகரன் (யாழ்ற்ரன் கல்லூரி), பா.பானுஜா (யாழ்ற்ரன் கல்லூரி), ந.கல்யாணி (யாழ்ற்ரன் கல்லூரி).

பிரிவு IV:- இ.சிவகௌரி (யாழ்ற்ரன் கல்லூரி), செ.சுயரூபி(யாழ்ற்ரன் கல்லூரி), ந.கோபிதன்(யாழ்ற்ரன் கல்லூரி).

பிரிவு V:- செ.ஹேதினி(கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி), சு.கஜனி(யாழ்ற்ரன் கல்லூரி), கோ.மிரோஜா(கலாநிதி ஆ.தியாகராஜா ம.ம.வி.).

பிரிவு VI:- க.கோகிலா (யாழ்ற்ரன் கல்லூரி), ம.திரேகா (யாழ்ற்ரன் கல்லூரி), ச.கிருஸ்ணவேணி(யாழ்ற்ரன் கல்லூரி). (250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரைநகர் ஈழ
# மார்கழித் திரு
# தேர்த் திருவிழாச் சிற

## துன்ப துயரங்கள் நீங்கி சுபீட்சம் ஏற்படப் பிரார்த்திப்போம்.

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற ஆதி அந்தமற்ற எம்பெருமான், வழிபடும் அடியார்களின் துன்பதுயரங்களை



நீக்கியருளும் பொருட்டு ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்பெறும் காரைநகர் சிவன் கோயிலில் சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரராக எழுந்தருளி வீற்றிருக்கின்றார்.

இன்று இந்த ஆலயத்தில் தேர்த்திருவிழா. அநியாயங்களையும் அக்கிரமங்களையும் அழித்தருள எம்பெருமான் திரு தேரிலே ஆரோகணித்து அழகுப்பவனி வரும் அற்புதக்காட்சி கண்கொள்ளாக்காட்சி.

பிறந்திருக்கும் புத்தாண்டு முதலாக ஈழம் வாழ் மக்கள் எல்லோரும் சுபீட்சமும் சமாதானமும் நிலவும் வகையில் சுகமே இருக்க வேண்டுமென இன்று ரதத்திலே எழுந்தருளும் ஈழத்துச் சிதம்பரப் பெருமானை உளமாரப் பிரார்த்தித்து அருளாசி வழங்குவதில் பேருவகை அடைகின்றோம்.

பஞ்சரதப் பவனிவரும்பஞ்சமூர்த்திகளும் பக்தகோடிகளுக்குப் பரிபூரணமான திருவருட்சக்தி கிட்டும் வகையில் அருள் பாலிக்க வேண்டும் என எல்லாம் வல்ல நமது பரம்பொருளான எம்பெருமானுடைய பாதக்கமலம் பணிந்து நல்லைக் குருமணியையும் வழுத்தி சிந்தித்து வந்தித்து வாழ்த்தி வணங்குகின்றோம்.

தேரிலே வரும் தேவாதி தேவனான சிவபெருமானுடைய அருட் கடாட்சத்தால் அடியார்கள் அனைவரும் அல்லல் நீங்கி, ஆனந்த சுகவாழ்வு வாழப் பிரார்த்தித்து அருளாசிகளை நல்குகின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம், யாழ்ப்பாணம்.


## ஆண்டி முனிவரின் வருகையுடன் 18 ஆம் நூற்றாண்டில் ஆரம்பமான ஆலயம்

இந்தியாவில் இருந்து வந்த ஆண்டி முனிவரின் வருகையுடன் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பமான இவ்வாலயம் இன்று ஈழத்துச் சிதம்பரமாக விளங்குகின்றது. ஆண்டி முனிவரின்



அருள்பெற்ற அம்பலவி முருகர் கோவில் ஸ்தாபகராக இருந்து அவரது சொந்தக் காணியான 400 பரப்புடன் இவ்வாலயம் அமைந்துள்ளது. அம்பலவி முருகர் பரம்பரையில் வந்த ஆதீனகர்த்தாக்கள் இருவரே இன்றும் கோவிலை ஒட்டிப் பிறவா இரட்டையராக இருந்து நிர்வகித்து வருகின்றனர். கோவில் திருப்பணி வேலைகள் பற்றி அம்பலவி முருகர் சிறிதளவேனும் கலக்கம் அடைந்திருக்க மாட்டாராம். திருவருள் நடத்துவிக்கின்றது. நாம் அதற்கு கருவியாக உள்ளோம் என்பதனையும் அந்தத் திருவருள் உணர்த்த நாம் உணர்கின்றோம் என்று அடிக்கடி கூறுவாராம். இதற்கு முன்னர் திருப்பணி வேலைகளில் ஈடுபட்டோரும் இதனை நன்கு உணரக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாலயத்தில் எழுந்தருளி இருக்கின்ற நடராஜர் விக்கிரகம் அற்புதமானது. இந்தியாவில் இருந்து வந்த பல பெரியோர்கள் இவ்விக்கிரகத்தின் அமைப்பு இந்தியாவில் ஒரிரு கோவில்களில் மட்டும் தான் இருப்பதாகப் புகழ்ந்திருக்கிறார்கள். தேர் உற்சவத்தின் போது நடராஜப் பெருமான் சிவகாமசுந்தரியுடன் உள்வீதியில் வரும் காட்சியும் கோபுரவாசல் கடந்து பிள்ளையார், ஐயனார், முருகன் உடன் பஞ்சமூர்த்திகளாகத் தேருக்கு எழுந்தருளும் காட்சியும் கண்கொள்ளாக் காட்சிகளாகும். அன்றிரவு நடைபெறும் ஆருத்ரா அபிஷேகத்தையும் அடுத்த நாள் பின்னேரம் நடைபெறும் திருவூஞ்சலையும் பார்ப்பதற்கு குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கூடுவார்கள். சிதம்பரத்தில் ஆருத்ரா அபிஷேகம் ஆயிரங்கால் மண்டபத்தில் இடம்பெறுவது போன்று இங்கும் வசந்த மண்டபம் அமைந்த சபையில் நடைபெறுகின்றது.

ச.வே.சிவகுருநாதன் JP, செயலாளர்.




## அற்புதமாய் அளக்கவொண்ணா அதிசயமாய்.....!

'ஞானத்தேன் பொந்தாய்' ஞாலத்தோர் போற்றிவர... வானவரும் வாழும் மாமுனிவர் சீலர்களும் காணும் கணந்தோறும் கண்குளிர்ந்து உள்ளுருக... வானும் கடலும் வணங்கியெழ.... வீற்றிருக்கும் ஈழச் சிதம்பர இறை.... அமுதின் துளிபருகி ஆதிரை நன்நாளில் அனைத் திஷ்ட சித்திகளும் வாங்கிச் சிலிர்க்க வருகின்றோம்! புத்தெழிலே பூண்ட உள் வீதியெங்கும் புரண்டு தொழுகின்றோம்!



அற்புதமாய், நம்மால் அளக்கவொண்ணா அதிசயமாய், கற்பனைகள் செய்தேனும் காணாப் பிரமிப்பாய், முற்றாகக் கோவில் முழுதும் புதிதாக்கிச் சொற்களுக்குள் சிக்காப் பிரமாண்டப் பிரகாரம் சிற்பங்கள் தூண்கள் சிறப்பாய் மெருகேற்றி, வற்றா அழகூட்டி, உயிரூட்டி, இறையருளால் நற்பணிகள் செய்தார்கள்! நான்கைந்து மாதத்துள் புத்தம் புதுக்கோவில் பொலிந்தொளிர வைத்தார்கள்.

மார்கழியின் வாசம் மனதைச் சிலிர்க்கவைக்கும். காலைக் குளிர்காற்று உயிரைக் கரையவைக்கும். நீராடி, நெஞ்சம் நிறைய, பரவசமாய்ப் பூச்சூட்டி, ஐயன் புனித அடி கண்ணிலொற்றி, தேர், ஐந்து ஆடித் திருவீதி எழுந்தருளும் கோல எழில்பார்த்துக் குளிர்ந்து புளங்கித்து, ஞானப் பசிபோக்கக் காரைப் பதிநாடி ஓடிவருகின்றோம்; உய்ய வரங் கேட்கின்றோம்!

இ.த.ஜெயசீலன், உதவி அரசாங்க அதிபர்.காரைநகர்.

## பஞ்ச ரதங்களின் பவனி கண்கொள்ளாக் காட்சி

ஈழத்துச் சிதம்பரம் என அடியார்களால் போற்றப்படும் திண்ணபுரத்துச் சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் திருவாதிரை உற்சவத்தின் உயர் திருவிழாவான இன்று, நடராஜப் பெருமான் தனது பா ார மூர்த்திகளுடன் பஞ்சரதங்களில் பவனி வருகின்ற காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.



முந்நூறு ஆண்டுகள் பழைமை வாய்ந்த இவ்வாலயத்தில் திருவாதிரை விழா நீண்டகாலமாகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இவ்வாலயம் எமது முன்னோர்களால் கட்டுவிக்கப்பட்டது. பின்னர் தொடர்ந்து காலத்துக்குக் காலம் இவ்வாலயம் புனரமைக்கப்பட்டு ஏழு தடவைகள் மகா கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.



நூறு வருடங்களுக்கு மேல் சென்ற ஆலய சுற்று மண்டபங்கள் மீண்டும் புதுப்பொலிவுடன் புதியதாக நிர்மாணிக்கப்பட்டு ஐயனார், அம்பாள் ஆகியோருக்கு வர்ணக்கற்களால் ஆன மொட்டைக் கோபுரங்களும் ஏனைய திருப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்தத் திருப்பணிகளில் முன்னின்று உழைத்த திருப்பணிச் சபையினர், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து நிதி உதவி புரிந்த அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். அதே போன்று ஏனைய திருப்பணிகளையும் மேற்கொண்டு 2010 ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற சிவபக்தர்கள் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும் என்பது எமது பெருவிருப்பமாகும். இந்த ஆலயத்தில் மூன்று தடவைகள் நடைபெறும் மகோற்சவத்தில் சாத்வீக மகோற்சவமாகிய திருவெம்பாவை உற்சவத்தைத் தரிசிக்கும் அடியவர்கள் அனைவரும் சகல சௌபாக்கியங்களுடனும் வாழ எம் பெருமானின் திருவருளை இறைஞ்சி ஆசி கூறுவதில் பேருவகை அடைகின்றோம்.

ஆ.அம்பலவிமுருகன், மு.சுந்தரலிங்கம், ஆதீனகர்த்தாக்கள்.


விளம்பர அனுசரணை

கே.கே.கந்தையாபிள்ளை அன் சன்ஸ்
318 (A)
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சிவகணேசன் ஸ்ரோஸ்
41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

மகாராணி பட்டுச்சோலை
50, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

இளவ சி ரெக்ஸ்ரைல்ஸ்
இல:57,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

ஸ்ரீ முருகன்
303, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

சிங்கப்பூர் ஜுவெல்லறி
93, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்
இல:50, 52, 54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஈஸ்வரன் றேடர்ஸ்,
இல: 69, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தி.
63,95,

ஏகாம்பரம் புடவை மாளிகை
72 (9), பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

வெங்கடேஸ்வரா
125 ஈ, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

அற்புதா ரேடிங் கொம்பனி
198, ஆஸ்பத்திரி வீதி,
(பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம்.

திருமு
259, கே.
46, ஆடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ழத்துச் சிதம்பரம் ருவாதிரை உற்சவம்

# றப்புமலர் — 09.01.2009



## தில்லைக்கூத்தனின் ஆருத்ரா தரிசனம்

இலங்கைத் திருநாட்டின் வடபால் யாழ்ப்பாணத்தின் மேற்குத் திசையில் அமைந்துள்ள காரைநகரின் வடக்கே உலகின் இரண்டாவது புகழ்பெற்ற திருத்தலமாக விளங்கும் ஈழத்துச் சிதம்பரம் என்னும் இத்தலத்தில் மார்கழித் திருவாதிரைக்கு முதல்நாள் பஞ்சரத பவனியும் அதனைத் தொடர்ந்து திருநடனம் புரியும் தில்லைக்கூத்தனின் ஆருத்ரா தரிசனமும் ஒருங்கே காணப்பெற்ற அடியார்கூட்டம் இன்று உலகெல்லாம் பரந்து வாழ்ந்தும் பெருமானின் பெருமைகளை உலகறியச் செய்துள்ளனர் என்பது மிகையாகாது.



இவ்வாறு சிறப்பு வாய்ந்த எங்கள் ஆலயத்தில் புதிய திருப்பணிச் சபையினரால் தேவஸ்தானத்தின் முதலாம் வீதி, மண்டபங்கள் அனைத்தும் முற்று முழுதாக புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளன. நடராஜப் பெருமானின் 108 தாண்டவங்களும் அமைக்கப்படுகின்றன. இந்த வேலைத்திட்டத்தில் 88 தாண்டவங்களும் நில வேலைகளும் மிகுதியாக உள்ளன. இந்த வேலைத்திட்டம் முடிவடைந்ததும் ஆலய வசந்த மண்டபம் தற்போது இருக்கும் வடிவமைப்பில் புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்குப் பாரிய நிதி உதவி தேவைப்படுகின்றது. இதற்கு அடியார்கள் ஒத்துழைப்பு வழங்கியும் உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் வாழும் அடியார்கள் நிதி உதவி வழங்கியும் ஆலயத் திருப்பணி வேலைகளை விரைவாக முன்னெடுக்க முன்வரவேண்டும்.

ஈழத்துச் சிதம்பரம் என்னும் சிறப்புப் பெயருக்கு காரணமான ஆடல் வல்லான் ஆனந்தக்கூத்தன் ஆண்டிக்கேணி ஐயனார் புதிய சிற்பத் தேர்களிலும் அம்பாள், விநாயகர், முருகன், மணிவாசகர் ஆகியோர் ஏனைய தேர்களிலுமாக ஐந்து தேர்களில் உலாவந்து அடியார்களுடைய துயரைப் போக்குகின்ற நாள் இன்றாகும். எம்பெருமானுடைய இந்த அருங்காட்சியைக் கண்டு திருவருளினைப் பெற்றுய்வோமாக.

நடயோகநாதன், பொருளாளர், திருப்பணிச்சபை.

## ஆலயங்களின் இதயம் போல் விளங்கும் ஈழத்துச் சிதம்பரம்

காரைநகர் சைவ ஆலயங்கள் அனைத்திற்கும் இருதயம் போல் விளங்குவது இங்குள்ள சிவன் ஆலயமாகும்.

இங்கு ஆலயக் கிரியைகள் யாவும் சிதம்பரத்தைப் பின்பற்றியே நடைபெற்று வருகின்றன. எனவே ஆலயம் அமைந்துள்ள தலம் ஈழத்துச் சிதம்பரம் என்றும் பெயரைப் பெறலாயிற்று.

இங்குள்ள நடராஜர் மூர்த்தியின் திருவுருவம் மிகவும் அற்புதமானது. பதஞ்சலி, வியாக்கிரமபாதர் என்னும் முனிவர்களுடன் கூடியது. இவ்விதமாக முனிவர்களுடன் கூடிய நடராஜர், அம்பிகை சமேதரராக அமைந்திருக்கும் பாவனை உள்ள திருவுருவம் இந்தியாவிலே கூட ஒரு சில தலங்களில்தான் உள்ளன. இவ்வாறு சிறப்புப் பொருந்திய நடராஜர் ஈழத்துச் சிதம்பரத்தில் இருந்து அருளாட்சி புரிகின்றார்.



மார்கழித் திருவாதிரையின் போது சைவ உலகம் சிதம்பரத்தை நோக்கும் எனினும் பல காரணங்களினால் அங்கு செல்ல முடியாதவர்கள் அதே கூத்தப்பெருமான் ஈழத்துச் சிதம்பரத்தில் காட்சி அளிப்பதால் இங்கே வந்து எம்பெருமானை வழிபட்டு மனநிறைவுடன் வாழ்கின்றனர்.

ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் திருவாதிரை விழாவின் ஓர் அங்கமாகிய இரதோற்சவம் இன்று நடைபெறுகின்றது. நடராஜப் பெருமானும், சிவகாமசுந்தரி அம்பாளும் - ஆண்டிக்கேணி ஐயனாருடனும் ஏனைய பரிவார மூர்த்திகளுடனும் ஐந்து தேர்களில் வீதிவலம்வரும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

இன்றைய பஞ்சரதப் பவனியையும் தொடர்ந்து இடம்பெறும் ஆருத்ரா அபிஷேகத்தையும், ஆருத்ரா தரிசனத்தையும் கண்டுகளித்து இறைவன் திருவருளைப் பெற்றுய்ய எம்பெருமானின் திருவருளை இறைஞ்சி ஆசிகூறி அமைகின்றேன்.

வி.ஈஸ்வரக்குருக்கள், *பிரதம சிவாச்சாரியார்.*

## அம்பலத்தரசின் அருள் விருந்தை அள்ளிக்கொள்ள வாரீர்!

மலர் என்றால் தாமரை யென்பது போல கோயில் என்றால் சிதம்பரத்தையே குறிக்கும். சிவத்தலமாகிய சிதம்பரத்துக்குச்சென்று வழிபாடு இயற்ற முடியாத பக்தர்கள் ஈழத்துச் சிதம்பர நாதனைச் சேவித்து உய்வடைகிறார்கள்.

ஈழத்திருநாட்டின் வடபால் அமைந்துள்ளது காரைநகர். இங்குள்ள திண்ணபுரத்தில் உள்ள சிவத்தலமே ஈழத்துச் சிதம்பரமென போற்றப்பட்டு வருகின்றது. திருவாதிரை உற்சவம் ஈழத்துச் சிதம்பரத்தில் பெருவிழாவாக நடைபெற்று வருகின்றது.



பக்திப் பரவசமாக நடைபெறும் உற்சவத்தில் பஞ்சரதம் பவனிவரும் விழா சிறப்பானது. ஆடலே புரியும் ஆனந்தக் கூத்தன் சிவகாம சுந்தரியுடனும் பரிவார மூர்த்திகளுடனும் தேரில் ஆரோகணிக்க வரும்போது அந்தணர்கள் வேதம் ஒலிக்க, சங்குநாதம் முழங்க, நாதஸ்வர, தவில் வித்துவான்கள் கான இசைபொழிய பக்தர்கள் ஆனந்தக்கண்ணீர் சொரிய ஆனந்தக்கூத்தாடி வரும்காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

புதிய அழகிய சித்திரத் தேரில் சிவகாம சுந்தரி சமேத நடராஜப் பெருமான் ஆரோகணிக்க ஆண்டிக்கேணி ஐயனாரும் புதிய தேரில் ஆரோகணிக்க ஐந்து தேர்கள் பெரும் வீதியாகிய மூன்றாம் வீதியில் ஆடி அசைந்து பவனிவரும் காட்சி மனத்திற்கும், கண்ணுக்கும் இனிய காட்சியாகும்.

எனவே, அன்றைய தினம் அம்பலத்து அரசை, அருள் விருந்தை, பொது நடன அரசை, புண்ணியனை, புலவரெல்லாம் புகழ் கண்ணியனை துதிப்போம். போற்றுவோம். அவன் அருள் பெற்று உய்வோமாக.

பண்டிதர் மு.சு.வேலாயுதபிள்ளை,
*தலைவர்,*
*காரைநகர் மணிவாசக சபை.*

*மலரமைப்பு:*
* தாரிகா *

## இயன்ற உதவிகள் செய்து புனரமைப்பில் பங்கு கொள்க

ஈழவளநாட்டின் சித்தர்கள், முனிவர்கள், ஞானிகள், அறிஞர்கள், வணிகர்கள் எனப் பல சிவனடியார்கள் வாழ்ந்த பல வளங்களைக் கொண்ட புண்ணியபூமி காரைதீவு என வழங்கப்படும் காரைநகர்.



இக்காரைநகரிலே உள்ள புண்ணிய - புராதனமான - ஆலயங்களிலே மிகத் தொன்மை வாய்ந்ததும் மிக்க அருளாட்சி கொண்டதும் ஆகம சாஸ்திர விதி முறைகளுக்கு உட்பட்டதுமாக விளங்குவது ஈழத்துச் சிதம்பரம் என அழைக்கப்படும் காரைநகர் சிவன் கோவில். இக்கோவிலிலே மூலமூர்த்தியாக சௌந்தராம்பிகா சமேத சுந்தரேஸ்வரப் பெருமானும், பூரணை புட்கலை சமேத ஆண்டிக்கேணி ஐயனாரும் அருளாட்சி செய்கிறார்கள். இக்கோவிலில் ஆதீனகர்த்தாக்களால் உருவாக்கப்பட்ட திருப்பணிச்சபை நித்திய பூசைகள், ஆலயப் புனரமைப்பு வேலைகளை ஆதீனகர்த்தாக்களுடன் சேர்ந்து அடியவர்களின் ஆதரவுடன் செய்துவருகின்றது.

பழைமை வாய்ந்ததும், பழுதடைந்த நிலையிலும் இருந்த உட்கொட்டகைகள் அனைத்தும் கலை அம்சம் பொருந்தியதாகவும் புராதனமான ஆகம விதிகளுக்கு உட்பட்டதாகவும் புனரமைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் ஐயனார், அம்பாள் மொட்டைக் கோபுரங்களும் உள்வீதியைச் சுற்றி 108 சிவதாண்டவமும் சமகாலத்தில் நடைபெற்றுவருகின்றது. அத்துடன் வசந்த மண்டபம் அதே விதி முறைப்படி (செய்ய) புனரமைக்க ஒழுங்கு மேற்கொள்ளப்படுகிறது.

இன்று சிவன், ஐயனார், அம்பாள், பிள்ளையார், முருகன் பஞ்சரதப் பவனி நடைபெறும் நன்னாளில் மேற் கொண்டும் திருப்பணி வேலைகள் நடைபெற தங்களால் இயன்ற உதவிகளைச் செய்வதோடு புனரமைப்பில் நீங்களும் பங்கு கொண்டீர்கள் என்ற எண்ணத்தை வருங்காலத்துக்கு உணர்த்துவீர்கள்.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

த.சற்குணராசா,
*தலைவர், திருப்பணிச்சபை.*

**தேரேறி அடியவர் தம் வல்வினை போக்கும் ஈழத்துச் சிதம்பரத்தில்லைக்கூத்தன் கழல் போற்றுவோம்**


**தி.தெய்வேந்திரம்**
பல்பொருள் வாணிபம்
5, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**கணேசன் ஸ்ரோஸ்**
201, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

**இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்**
105, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**முருகன் கொம் நெற்**
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
ஆடியபாதம் வீதி, யாழ்ப்பாணம்.

**சீமாட்டிபுடைவைக்கடல்**
122, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**லலிதா புடைவை மாளிகை**
இல: 5,6, நவீனசந்தை,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உலகின் அதி உச்ச 1000 வங்கிகளில் ஒன்றாக உயர்ந்துள்ள கொமர்ஷல் வங்கி

இலங்கை கொமர்ஷல் வங்கி, மூலதன போதியத்தன்மை மற்றும் உறுதியில் உலகின் உச்ச ஸ்தான 1000 வங்கிகளில் இலங்கையின் முதலாவது வங்கியாக இடம்பெற்று இதன் சாதனை வரலாற்றில் இன்னொரு மைல்கல்லை எட்டியுள்ளது. இந்தப் பெருமைமிக்க பட்டியலில் 950 ஆவது இலக்கத்தில் வங்கியின் பிரவேசமானது, ஒரு வங்கியின் ஸ்திரத்தன்மையை மதிப்பிடுவதற்கு அதிமுக்கியமான குறிகாட்டியாக அதன் படி ஒன்று மூலதனப் பலத்தின் அடிப்படையில் அமைந்ததாகும். இதே போன்று அல்லது இதையும்விட முககியமாக நிதி உறுதியில் கொமர்ஷல் வங்கி உலகில் 155 ஆவது நிலையைப் பெற்றதன் மூலம் மேலும் திறனை வெளிப்படுத்தியுள்ளது.

உலகின் முதலீட்டு, தனிநபர் வங்கிச் சேவை மற்றும் வர்த்தக வங்கியியல் துறைகளுக்கான முன்னோடி சஞ்சிகையான "த பாங்கர்" தொகுத்துள்ள உலகின் உச்ச 1000 வங்கிகள் பட்டியலில் ஐக்கிய இராச்சியத்தின் **HSBC** ஹோல்டிங்ஸ் முதன்மை வகிப்பதுடன் உச்ச 10 வங்கிகளில் அமெரிக்க வங்கி, சிற்றி குறூப், மிற்சுபிஷி **UFJ** கிரடிற் அக்கிரிகோல் மற்றும் முன்னணிப் பெயர்களைக் கொண்டவை இடம்பெற்றுள்ளன. "இலங்கை வங்கியொன்றை உச்ச ஸ்தான 1000 வங்கிகளில் ஒன்றாக வைத்திருப்பது இலங்கையின் வங்கியியல் துறைக்கு ஒரு குறிப்பிடத்தக்க தருணம் வாய்ந்த சாதனையாகும்" என்று கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் அமித குணரத்ன குறிப்பிட்டார். கொமர்ஷல் வங்கி மிகவும் கஷ்டமான பேரினப் பொருளாதார நிலைவரங்களில் கூடத் தனது அடிப்படைகளைச் சரிவரப் பெறுவதில் எப்போதும் கவனம் செலுத்தி வந்துள்ளது. எமது ஸ்திரத்தன்மைக்கு மூலாதாரங்களில் ஒன்றாக அமைந்துள்ளது.

உலகின் பாரிய பொருளாதார நிறுவனங்களுக்கும் கூட இது சவால் காலமாகும். ஆதனங்களுக்கு ஆதாரமான மூலதன போதிய தன்மை அதன்மூலம் வைப்பாளர்களுக்கு ஈற்றில் அதிக பாதுகாப்பு, நிதிச் சந்தையில் நிலவும் தற்போதைய நெருக்கடியில் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆயினும் இலங்கை வங்கிகளில் இதன அதிக தாக்கம் இன்னும் ஏற்படவில்லை. குறிப்பாக மத்திய வங்கி மூலதன மாற்றங்களின் மீது செலுத்திய கொள்கைகள் மற்றும் வங்கிகளின் மீதான மேற்பார்வையின் விளைவாக இந்த தொற்று நெருக்கடியை இலங்கை பெருமளவு தவிர்த்துக் கொண்டுள்ளது என்று திரு. குணரத்ன தெரிவித்தார். "எமது நாட்டில் நிகழ்ந்த சில அண்மைச் சம்பவங்கள், மக்கள் தாங்கள் தொடர்பு கொள்ளும் நிதி நிறுவனங்களின் நற்பெயர், கண்ணியம் ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தவைத்துள்ளன. எமது வங்கிக்குக் கிடைத்த தரப்படுத்தலானது எமது ஸ்திரத்தன்மையை மீண்டும் உறுதிசெய்வதுடன் எமது வாடிக்கையாளர்களுக்கு முக்கியத்துவமானதும் எமது ஊழியர்களுக்கு பெருமை தரக் கூடியதுமாகும்" என்றார். "த பாங்கர்" அறிகையின் படி கொமர்ஷல் வங்கியின் ஆதனங்கள் 246 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். ஆதனங்களின அடிப்படையில் வங்கி ஸ்தான 1000 உச்ச வங்கிகளில் 948ஆம் நிலையில் உள்ளது.

உலகமெங்குமுள்ள 5000க்கு மேற்பட்ட வங்கிகளின் தரவுகளிலிருந்து 1000 வங்கிகள் தொகுக்கப்பட்டதுடன் உலக நிதி சமூகத்தினால் இது வங்கிகளின் தரநிலையில் மற்றும் ஆய்வுக்கு நிச்சயமான வழிகாட்டியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**விளம்பர விவரணம்**

1970 இல் தொடங்கப்பட்ட "த பாங்கர்" உச்ச 1000 வங்கிகள் உலகத் தெரிவு, ஆண்டு பூராகவும் சிரேஷ்ட வங்கியாளர்கள், நிறுவகப் பொருளாளர்கள், நிறுவக நிதியாளர்கள், தொழில்சார் சேவைகள் சமூகம் மற்றும் அநேகரினால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 80 ஆண்டுகளுக்கு முன் ஆரம்பிக்கப்பட்ட "த பாங்கர்" அதிகாரபூர்வச் செய்திகள், கட்டுரைகள், ஆய்வுகள் மற்றும் நேர்காணல்களின் ஒப்பற்ற சேர்க்கையை வழங்கவும், தூண்டவும், அறிவிக்கவும் அமைந்துள்ளது. மாதா மாதம் நிதித்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆழமாக விளக்குவதுடன் நித விவகாரங்களில் அது செல்வாக்கு மிக்க முடிவுகளை எடுப்போரிடம் தனித்துமான தொடர்பு கொண்டுள்ளது. **FT** குழுமத்தின் விசேடத்துவ வெளியீட்டு, மாநாட்டு அங்கமான பினான்ஷல் ரைம்ஸ் பிஸ்னஸ் அமைப்பினால் "த பாங்கர்" வெளியிடப்படுகிறது.

1969 இல் இணைக்கப்பட்ட கொமர்ஷல வங்கி, நுகர்வோர் வங்கியியல், திறைசேரி மற்றும் பிணைகள் சந்தைகளில் ஆதிக்கமுள்ள நிலைகளுடன் இலங்கையில் முன்னணி வங்கியாகத் திகழ்கின்றது. 168 கணினி இணைப்பிலான கிளைகள், சுப்பர் மார்க்கெட் வங்கியியல் சேவை நிலையங்கள் மற்றும் இலங்கையில் 324 **ATM**கள் அடங்கிய வலையமைப்பை கொண்டுள்ளது. பங்களாதேஷில் இதன் செய்பாடுகள் ஒன்பது கிளைகளாக வளர்ச்சியடைந்துள்ளன. இலங்கையின் ஆண்டின் மிகச் சிறந்த வங்கி என "த பாங்கர்" சஞ்சிகையினால் ஆறு தடவைகளும் அமெரிக்க குளோபல் பினான்ஸ் சஞ்சிகையினால் இலங்கையில் மிகச்சிறந்த வங்கியாக தொடர்ந்து பத்து ஆண்டுகளாகவும் தரப்படுத்தப்பட்டுள்ளது. 2007 ஜூலையில் இன்னொரு பிரபல சர்வதேச நிதிச் சஞ்சிகையான "யூரோ-மணி" இலங்கையில் மிகச் சிறந்த வங்கி என்ற தரச்சிறப்பை இவ் வங்கிக்கு வழங்கியமையும் குறிப்பிடத்தக்கது.

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 13 . 07 . 1933



உதிர்வு 24 . 12 . 2004

**அமரர் கணவதிப்பிள்ளை குணசிங்கம்**

*திதி: திரயோதசி (09.01.2009)*

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தது
உங்கள் நினைவுகள் துளிர்த்தன
நீங்கள் காட்டிய நன்நெறியில் வாழ்கின்றோம்.

44/12, மணற்தரை லேன்,
கந்தர்மடம். (81592) கு.ஜனார்த்தன் (மகன்).

## சொற்பொழிவாளர் கௌரவிப்பு

வடமராட்சி, ஜன.9

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயில், பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சொற்பொழிவாளர் கௌரவிப்பு இடம்பெறும்.

பிரதி ஞாயிறு தோறும் வல்லிபுரக் கோயிலில் 10 மணிக்கு இடம்பெறும் பூசையைத் தொடர்ந்து பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுகளில், கடந்தவருடம் கலந்து கொண்டு ஆன்மீகச் சொற்பொழிவாற்றிய சொற்பொழிவாளர்கள் பலரும் இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளார்கள். (202-236)


## சொற்பொழிவு

வடமராட்சி, ஜன.9

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வாரம் தோறும் நடத்திவரும் வாராந்த ஆன்மீக நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு "அடியார்கள்" என்னும் தலைப்பில் சமுர்த்தி வங்கி உத்தியோகத்தர் ரி.கருணாகரனின் சொற்பொழிவு இடம்பெறும். (202-236)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 06 . 1935



மறைவு 22 . 12 . 2007

**திருமதி துரைராசா ராசாத்தி**

*திதி: திரயோதசி (09.01.2009)*

*அம்மா இதயத் தெய்வமே!*
*உங்களின் உயர்ந்த இலட்சியங்களை*
*எங்கள் நெஞ்சில் வைத்து நீங்கள் காட்டிய*
*சத்திய பாதையில்- நாங்கள் உறுதியுடன் செல்வோம்*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய நாங்கள் ஆண்டவனை*
*பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!*

இல.90. நாவலர் வீதி,
முஸ்லீம் தெரு,
நாவாந்துறை,
யாழ்ப்பாணம். (81578)

தெய்வேந்திரன் (மருமகன்),
திருமதி ஜெயராணி (மகள்),
பேரப்பிள்ளைகள் (லண்டன்),
பூட்டப்பிள்ளைகள் (லண்டன்).

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 24 . 06 . 1946



மறைவு 12 . 01 . 2006

**அமரர் சின்னத்தம்பி நடராசா**

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், யாழ். சிறைச்சாலை)

தோற்றங்கள் மாறிப் போகும் தோல் நிறம் மாறிப் போகும்
மாற்றங்கள் பல வந்தால் மனசு கூட மாறிப்போகும்- ஆனால்
அகல்விளக்காய் மின்னும்- உங்கள் அழகான உறவு மட்டும்
ஆண்டுகள் பல ஆனாலும் அழியாது எமை விட்டு
அன்புத் தெய்வமே! ஆறவில்லை இன்னும் எம் மனம்
இன்பத்தை அழித்துவிட்டு ஈசனடி சேர்ந்தீரோ?

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கச்சாய் வீதி, கொடிகாமம். (81509) குடும்பத்தினர்


**Brindavan College**
Group of institutions
Vinayaka Layout, Bhoopasandra, RMV 2nd Stage, Bangalore-94
Affiliated to Bangalore University, Approved by AICTE & UGC
Accredited at the 'A' level by NAAC
Tel : 080-2341 4557, 23417833 Fax: 080-2341 7832
Email : info@brindavancollege.com

FREE SEMINAR & Spot Admission by Chairman / Principal at

| PLACE | HOTEL NAME | DATE | TIME |
|---|---|---|---|
| COLOMBO | HILTON | 11-01-09 | 9.30 AM to 12.30 PM |

COURSES OFFERED

B.Sc., Biotechnology | B.Sc., Microbiology | B.Sc., Genetics | B.Sc., Comp.Sc.
BCA | BBM | B.Com | & PUC (10+2)
M.Sc., Biotechnology | M.Sc., Microbiology | M.Sc., Applied Genetics | MBA MCA

**Brindavan College of Engineering**
Dwarka Nagar, Bagalur Main Road, Yelahanka, Bangalore - 63.
Tel : 080-2847 8388. Fax : 080-2341 7832
Approved by AICTE, Recognized by Govt. of India, Karnataka, Affiliated to VTU

**B.E-**
- Electronics & Communication Engg (ECE)
- Information Science & Engg. (IT) (ISE)
- Computer Science & Engineering (CSE)
- Civil Engineering (CVL)

SPECIAL DISCOUNT FOR STUDENTS JOIN AT THIS SEMINAR
- Study with more than 200 Sri Lankan Students
- About 600 Sri Lankan Students have graduated
- Degree recognized by UGC - Sri Lanka
- Pay US$ 100/- for reservation and book the seat for UG & PG
- Students with A/L passes or pending rusults can register for UG courses and save one year

www.brindavancollege.com
Company Secretarial Services 285C-1/1, Stanley Tilakaratne Mw., Nugegoda
Tel : 011 - 4580270 / 0777317043


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவையும் திருவாதிரையும்

மணிவாசகப் பெருமான் அருளியது திருவாசகம். இது பன்னிரு திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக உள்ளது. நெஞ்சை உருக்குந் திருவாசகம் மாணிக்க வாசகர் சொல்லச் சொல்ல இறைவனால் எழுதப்பெற்ற சிறப்பினையுடையது. திருவாசகத்துக்கு அருட்டிரு வாசகம், மணி வார்த்தை, அழகு வார்த்தை என்றெல்லாம் பெயர்கள் உள்ளன. அதை அருள்நாத வடிவமான வாசகம் எனப் போற்றுவர். திருவாசகம் சிவானுபவம் என்பர். திருவாசகத்தைப் பிறநாட்டினர் பலர் தங்கள் மொழிகளில் பெயர்த்துப் படித்துப் போற்றுவர். திருவாசகம் 51 பதிகங்களைக் கொண்டது. அவற்றில் 656 பாடல்கள் வந்துள்ளன. அவை பலவிதமான யாப்புகளில் அமைந்துள்ளன. சில மிக நீளமான பாடல்களாயுள்ளன. திருவாசகத்தில் ஒரு பகுதி திருவெம்பாவை.

திருவெம்பாவை (திரு எம்பாவை) என்பது தெய்வத் தன்மை வாய்ந்த பாவைப் பாட்டு என்று பொருள்படும். இப்பாட்டுகளின் இறுதியில் எம்பாவாய் என்ற சொற்றொடர் வருவதால் எம்பாவை என்பதே இவ்வகைப் பாட்டுக்குப் பெயராயிற்று. இன்னோசை கருதி, ஏல் ஓர் என்னும் அசைகளோடு சேர்ந்து ஏலோர் எம்பாவாய் என்று மேற்சொன்ன சொற்றொடர் வருவது பெருவழக்கு. பாவை என்பது பராசக்தியைக் குறிப்பது.

ஒரு மார்கழி மாதம் மணிவாசகர் திருவண்ணாமலையில் தங்கியிருந்தார். திருவாதிரை நாளுக்குப் பத்து நாள்களுக்கு முன் தொடங்கி திருவாதிரை நாள் வரையுள்ள பத்து நாள்களும் ஐந்து வயது தொடக்கம் பன்னிரண்டு வயது வரையுள்ள கன்னிப் பெண்கள் பாவை நோன்பு நோற்றலைக் கண்டார் மணிவாசகர். அதிகாலை எழுந்து இறைவன் புகழ்பாடிக்கொண்டு தோழியரையும் எழுப்பிச் சென்று நீராடித் திருக் கோயில்களைத் தொழுது வீடு திரும்பும் காட்சியை நேரில் கண்ட மாணிக்கவாசகப் பெருமான் திருவெம்பாவை என்ற பெயரில் இருபது பாடல்கள் பாடினார். திருவெம்

## ஞானக்கதிர்

பாவை பத்து நாள்களும் இப்பாடல்கள் சைவக் கோயில்களில் பாடுவதை இன்றும் காணலாம். இறைவனது அருட்சக்தியின் செயலைத் திருவெம்பாவைப் பாடல்களிற் காணலாம். திருவாச கத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார் என்பது பழமொழி. இதனால் திருவாசகத்தின் சிறப்பு புலப்படுகின்றது. திருவாசகத்தினுள்ளே பாவைப் பாடல்கள் முதலிடத்தை வகிக்கின்றது. திருவெம்பாவை தெவிட்டாத இனிமையுடைய தெய்வீக ஞானப் பாடல்களாகும். கன்னிப் பெண்கள் மழை வளஞ் சிறந்து நாடு செழிக்கவும் தமக்கு வருங் காலத்தில் நல்ல கணவன் வாய்க்கவும் பராசக்தியை வழிபடும் நோன்பு பழங்காலந்தொட்டே தமிழ் நாட்டிற் பயின்று வந்துள்ளது. குளிர் மிகுந்த மார்கழி மாதத்தில் இளங் கன்னியர் அதிகாலை துயிலெழுந்து, தம்முடைய தோழியரையும் துயிலெழுப்பிக்கொண்டு நீராடு துறைக்குச் செல்வர். அங்கே நீராடிய பின் ஈர மண்ணினாற் பாவை உரு செய்து பராசக்தியை வழிபாடுவர். இதை பாவை நோன்பு என்று சொல்லப்பட்டது. நீரா டப் போகும் கன்னிப் பெண்கள் விளையாட்டாக ஒருவரையொருவர் எள்ளி நகையாடிப் பாடிச் செல்வர். மணிவாசகரும் அக்கன்னியருள் ஒருத்தியாகப் பாவனை செய்து, அக் கன்னியர் பாடுவது போல அருளிச் செய்த திருப்பாடலே திருவெம்பாவையாகும்.

சிவபெருமான், திருமாலும் பிரமனும் அடிமுடி தேடிக் கண்டறிய முடியாதவாறு சோதிப் பிளம்பாய் நின்ற இடம்தான் திருவண்ணாமலை. ஆகவே, அத்தலத்தில் பாடிய இப்பாட்டிலே இறைவனைக் குறிக்குமிடத்து மணிவாசகர் ஆதியும் அந்தமுமில்லா அரும்பெரும் சோதி என்றார். சிவனுக்கு அபிஷேக நாள்கள் மூன்று நட்சத்திரங்களையும் மூன்று திதிகளையும் கொண்டவை. சித்திரைத் திருவோணம், ஆனி உத்தரம், மார்கழி திருவாதிரை நட்சத்திர தினங்களாகும். ஆவணிச் சதுர்த்தி, புரட்டாதி சதுர்த்தி, மாசிச் சதுர்த்தி என்பன திதியைக் கொண்ட அபிஷேக தினங்களாகும். இவ்வகையில் மார்கழித் திருவாதிரை நட்சத்திரம் இறைவனுக்கு அபிஷேகம் செய்யச் சிறப்பானது. திருவாதிரை நட்சத்திரத்தை ஆதிரை என வடமொழியில் அழைப்பர்.

திருவெம்பாவையின் இறுதித் தினம் இறைவனின் திருவாதிரைத் தினமாக அமைந்துள்ளது. திருவாதிரை வழிபாடு வைகறை வழிபாடாக அமைந்துள்ளமையும் ஒரு தனிச் சிறப்பாகும். இறைவனுக்குத் தீபதூப, மாலை சார்த்தல், ஆடை அணிவித்தல், நைவேத்தியம் முதலியனவும் செய்யப்படும். மார்கழித் திருவாதிரைக்கே உரித்தான நைவேதனம் பிட்டு, கழி என்பனவாகும். இறைவனுக்கும் அம்பிகைக்கும் நைவேத்திய மிட்டு பழவகை, தாம்பூலம் என்பனவும் அர்ப்பணிக்கப்படும். திருவெம்பாவை படிக்கப்பட்டு ஒவ்வொரு பாடல் முடிவிலும் கர்ப்பூர ஆரத்தி காண்பிக்கப்படும். நடராஜ தரிசனத்திலே நீராடல் காத்தலையும், தீபாராதனை அழித்தலையும், சாத்துப்படியில் வெள்ளை நிறம் மறைத்தலையும், வீதி வலம் அருளலையும், வீதி உலா படைத்தலையும் காட்டுவதாக அறிஞர் கூறுவர். 'போற்றியாம் உய்ய ஆட்கொண்டருளும் பொன்மலர்கள், போற்றியாம் மார்கழி நீராடலோர் எம்பாவாய்' என்று திருவெம்பாவைப் பாடலின் இறுதிப் பாடல் இறுதி வரிகளை நினைந்து 'மல்விரு ஊற்றுறங்காமல் மன்னுபரிபாகர் அருட், செலமுழுக வருக எனச் செப்பல் திருவெம்பாவாய்' என்னும் திருவெம்பாவையின் உண்மைக் கருத்தறிந்து உய்வோம். ★


## இவ்வருடப் பொங்கல் திருநாளில் நீங்களும் ஒரு தங்க அறுவடையை நோக்கி முன்னேறுங்கள்



- தைபிறந்தால் வழி பிறக்கும் தங்கமே தங்கம்! என்பது என்றும் அனைவரின் வாழ்வுக்கும் பொருந்தும்.
- செலான் வங்கி அறிமுகப்படுத்தியிருக்கும் கோல்ட் ஹார்ட் கணக்கில் தங்கத்தை முதலீடு செய்வதன் மூலம் உங்களின் பொன்னான எதிர்காலத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- அப்படியென்றால் உங்கள் அன்பிற்குரியவர்க்கு ஏன் செலான் வங்கியில் கோல்ட் ஹார்ட் கணக்கு ஒன்றை ஆரம்பிக்க இயலாது?
- உங்கள் தங்க கணக்கிலுள்ள மீதி, கிராம் கணக்கில் காட்டப்படும். ஆரம்ப வைப்பு சராசரி 5 கிராம்களாக இருக்கவேண்டும் மேலும் 0.1 கிராம் பெருக்கத்தின் வைப்பினூடாக உங்கள் தங்க முதலீட்டினை அதிகரிக்கலாம்.
- செலான் வங்கியில் கோல்ட் ஹார்ட் கணக்கு ஒன்றை ஆரம்பித்து உங்கள் அன்பிற்கு உரியவர்களைப் பூரிப்படையச் செய்யுங்கள்.
- இன்றைய உங்களின் சேமிப்பு நாளை உங்கள் பிள்ளைகளின் எதிர்காலம்.
- தேவைக்கு ஏற்ப பணமாகவோ அல்லது தங்கமாகவோ (24 கரட்) உடன் பெற்றுக்கொள்ளலாம்.

பொங்கலோ பொங்கல் !

செலிங்கோ செலான் கோல்ட் ஹார்ட்
பொன்னான எதிர்காலத்திற்கு

மேலதிக விபரங்களுக்கு அணுகுங்கள்:
அஸார் - 0773 856200 சதீஷ் - 071 4567789 தினேஷ் - 077 2092837
தலைமையகம்: செலிங்கோ செலான் டவர்ஸ், 90 காலி வீதி, கொழும்பு 3.
தொ.பே: 2456789, 074-701000 பெக்ஸ்: 2456456
வெப்தளம்: https://goldheart.seylan.lk

செலான் வங்கி


## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகளில் மற்றும் சில பாடசாலைகளின் விவரம்

யாழ்ப்பாணம்,ஜன.9

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையின் முடிவுகள் வெளியாகியதை அடுத்து பாடசாலைகளின் அதிபர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களின் விவரங்களை 'உதயனு'க்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அவற்றின் விவரங்கள் பாடசாலை ரீதியாக வருமாறு:-

சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

***விஞ்ஞானம்:*** லிஜா சுந்தரலிங்கம் - 3ஏ, மடோனா ஹசாந்தி சிறீஸ்கந்தராஜா - ஏ2பி, சயந்திகா சிவகுமார் - ஏபிசி, சுபா ராஜேந்திரம் 3பி.

***வர்த்தகம்:*** சாரங்கி பாலகிருஷ்ணன் - 2ஏபி, டிலோஜி குருநாதன் - ஏ2பி.

***கலை:*** டயானா துவன்புத்ரா - 3ஏ, குமுதா சிவராஜா - 3ஏ, றொசாற்றா றஜீந்தா வில்லியம் பற்றிக் - 3ஏ, பிருந்தா பாலசுப்பிரமணியம் - 3ஏ,

அனுசானி அழகராஜா - 2ஏபி, மர்லின் தயானா ஜோசெப் எனோசன் - 2ஏபி, மயூரி மோகன் - 2ஏபி, சோபின்யா ஜீவநாதன் - 2ஏபி, குணசாந்தினி மகேஸ்வரன் - 2ஏபி, மதுராந்தி தவகுமாரன் - 2ஏபி, சுரேகா பரமநாதன் - 2ஏபி, வாசுகி சேனாதிராஜா -2ஏபி, அபிலாஷா தர்மலிங்கம் - 2ஏபி, நிஷாந்தி மகேஸ்வரன் - 2ஏபி, ஜெசுரா சிவநாதன்- 2ஏபி,

மேரி குணதீபா அல்போன்ஸ் - ஏ2பி, அபிராமி உருத்திரகுமாரன்- ஏ2பி, சுலக்சினி மகாலிங்கம் - ஏ2பி, சுந்தரவடிவு எஸ்பீரியல் - ஏ2பி, பிரசாந்தனா உலகநாதன் - ஏ2பி, மாலின் செபரட்ணதாஸ் - ஏ2பி,

கிரிஸ்ரீனா நித்தியநாதன் - ஏபிசி, சிது சிறீபதி - ஏபிசி, கார்திகா ஈஸ்வரதாசன் - ஏபிசி.

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி

***கணிதம்:*** யோ.பாஸ்கரன்- 2ஏபி.

***உயிரியல்:*** தி.சேனதீர - பி2சி.

***வர்த்தகம்:*** பு.சுதாஜினி - ஏபிசி, நே. மிதுலா - ஏசிஎஸ், செ.சரண்யா - ஏ2சி, தி. கிருஸ்ணதாஸ் - ஏசிஎஸ்.

***கலை:*** ச.மதியழகி - 3ஏ, க.தர்சினி ஏபிசி, ச.விஜிதா - ஏ2பி, தே.கென்ஸ்மன் - 2ஏபி, ப.தவப்பிரியன் - ஏ2பி, பொ.கஜிதா - ஏபிசி, ச.கஜந்தினி - ஏ2பி, வ.ஹேமராதா - ஏ2பி, பா.ரேணுகா - ஏ2பி.


சுன்னாகம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ:து

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு மலிவு விலையில்

பொங்கல் பொதி
ரூபா 420 மட்டும்

பொங்கல் பொதியில் உள்ளடங்கும் பொருள்களின் விவரம்
தரமான தீட்டல் பச்சை - 01 கிலோ,
வெல்லம் - 500 கிராம், பிளம்ஸ் - 50 கிராம்,
கஜு - 20 கிராம், பேரீந்து - 100 கிராம்,
ஏலம், தேன், நெய் அத்துடன் பின்வரும்
பூஜைப் பொருள்களும் உள்ளடக்கப்படுகிறது
(விபூதி, சந்தனம், குங்குமம், ஊதுபத்தி, சூடம்).

எல்லோரும் சேர்ந்து பொங்கல் தினத்தை உற்சாகத்துடன் கொண்டாடுவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முக்கிய கலந்துரையாடல்

வேலையற்ற பட்டதாரிகளுக்கான புதிய நிர்வாகத்தை தெரிவு செய்தலும் புதிய பதிவுகளை மேற்கொள்ளுவதற்குமான கலந்துரையாடல் நாளை (10.01.2009) சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பெருமாள் கோயிலில் இடம்பெறும். அனைவரையும் ஒன்று கூடுமாறு பட்டதாரிகள் செயற்குழு கேட்டுக்கொள்கின்றது.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த.உயர்தர பரீட்சையில் வணிகப் பிரிவில் தோற்றி 2A,B (நிலை 41) பெறுபேறு பெற்ற எமது படிப்பகத்தின் செயலாளரும், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவனுமான

செல்வன் **லோகநாதன் நாகராஜன்**

அவர்களைப் பாராட்டுவதோடு அவரது உயர்படிப்பும், சமூக சேவைப் பணியும் மேன்மேலும் வளரவேண்டும் என உளமார வாழ்த்துகின்றோம்.

**சக நிர்வாகிகள்**

கணபதி படிப்பகம், நெடியகாடு, வல்வெட்டித்துறை.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரியில் ஆய்வுகூட பணியாளராக கடமையாற்றிக் கொண்டிருந்த

**நடராஜா பத்மதேவா**

அவர்கள் (07.01.2009) புதன்கிழமை திடீரென காலமானதை அறிந்து மிகவும் துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தாருடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களைப் பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவு நலன்புரிச் சங்கம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.

## தவறிவிட்டது

பாலச்சந்திரன் சஜீபன் என்பவரது தே.அ.அ. (920943195V) யாழ்ப்பாணத்திற்கும் நாச்சிமார் கோயிலடிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு: செ.பாலச்சந்திரன்

**பூம்பொழில்**

*இல.1201, K.K.S.றோட்,*
*வண்ணை மேற்கு, யாழ்ப்பாணம்.*
*தொ.பே: 077 9596584*

## University of Jaffna, Sri Lanka
## Faculty of Graduate Studies

*Registration for Postgraduate Research Programmes*
*M.Phil & Ph.D - 2009/2010*

Applications are invited from qualified persons for enrolment to the Master of Philosophy (M.Phil.) and Doctor of Philosophy (Ph.D.) Degree Programmes offered by the Faculty of Graduate Studies, University of Jaffna.

Relevant information and prescribed application forms can be obtained from the Assistant Registrar, Faculty of Graduate Studies, University of Jaffna (T.P.No: 021 222 3608) on production of a receipt in support of a payment of Rs.200/- to the University Account 90501 at the People's Bank, University Branch. Thirunelvely or forwarding a money order of Rs.200/- drawn in favour of "The Bursar, University of Jaffna". Requests by post should be accompained by a self addressed envelope not less than 23x10 c.m. in size affixing stamps to the value of Rs.15/-.

Duly completed applications should be sent to the Assistant Registrar. Faculty of Graduate Studies on or before 16th February 2009. Late and incomplete applications will not be considered.

Registrar
08.01.2009

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும்



தாயின் மடியில்
06*02*1940


ஆண்டவன் அடியில்
09*12*2008

### அமரர் சிவகுரு கந்தசாமி

09.12.2008 அன்று இறைபதம் அடைந்த அமரர் சிவகுரு கந்தசாமி அவர்களின் அந்தியேட்டி நிகழ்வு இன்று (09.01.2009) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
ஏழாலை. (81665) **குடும்பத்தினர்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
31*08*1934

இறப்பு
22*12*2007

திதி: வளர்பிறை திரயோதசி
(09.01.2009)

### அமரர் சபாபதி தனபாலன்

எம்மையெல்லாம் ஆறாத்துயரில்
ஆழ்த்திவிட்டு மீளாத்துயில் கொண்டு
ஓராண்டைக் கடந்துவிட்ட எமது
குடும்பத் தலைவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சிறுப்பிட்டி கிழக்கு,
நீர்வேலி. (81651)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## பட்டப்பின் படிப்புகள் பீடம்

பண்பாட்டியலில் முதுகலைமாணிக் கற்கைநெறி - 2009/ 2010 (Batch II)

### புதிய அனுமதி

மேற்படி சுயகொடுப்பனவுக் கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**அனுமதிக்கான தகைமைகள்**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ஏதாவது ஒரு கற்கை நெறியிற் பட்டதாரியாக உள்ள எவரும் விண்ணப்பிக்கலாம். அல்லது பல்கலைக்கழக மூதவையால் ஏற்கப்படக் கூடிய வேறு தகுதிகளும் அனுபவமும் உடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**கற்கைக் காலம்:**

ஒரு வருடம்
சனி, ஞாயிறு கிழமைகளில் விரிவுரைகள் நடைபெறும்.

**மொழி மூலம்:** தமிழ்

**அனுமதி:**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் நடத்தும் நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

**விண்ணப்பப் படிவம் பெறும் முறை:**

விண்ணப்பப் படிவங்களை நேரில் பெற விரும்புவோர் பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் பணம் கட்டும் பத்திரத்தைப் பெற்று மக்கள் வங்கி, யாழ்.பல்கலைக்கழகக் கிளையில் ரூபா 100/= செலுத்திய பற்றுச்சீட்டை பட்டப்பின் படிப்புகள் பீட அலுவலகத்தில் சமர்ப்பிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ்.பல்கலைக்கழகம் என்ற பெயரில் பெறப்பட்ட ரூபா 100/= இற்கான காசுக்கட்டளை/ தபாற்கட்டளையுடன் ரூபா 5/= பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியிடப்பட்ட 23X10 செ.மீ. அளவிலான தபால் உறையினையும் உதவிப் பதிவாளர் பட்டப்பின் படிப்புகள் பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் யாவும் 2009.02.06ஆம் திகதிக்கு முன்னர் பட்டப்பின் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இக்குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாவிடின் மேற்படி கற்கை நெறியானது இரத்துச் செய்யப்படக் கூடும்.

**பதில் பதிவாளர்.**
08.01.2009 (சி/55656)

## தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஜன.9

மட்டுவில் பன்றித் தலைச்சிக் கண்ணகை அம்பாள் ஆலய பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கும், தீர்த்தத்திருவிழா மறுநாள் சனிக்கிழமை 10 மணிக்கும் நடைபெறவுள்ளன. (204-131)

## மானிப்பாய் கோவிற்பற்று ப.நோ.கூட்டுறவுச் சங்கம் (வ.து)
## மாபெரும் விழாக்கால அதிரடி மலிவு விற்பனை

எதிர்வரும் பொங்கல் திருநாளை முன்னிட்டு எமது சங்கத்தால் பின்வரும் பொருள்கள் நியாய விலையில் விற்கப்படுகின்றன.

| | |
|---|---|
| தீட்டல் | -1Kg |
| சர்க்கரை | -500g |
| பயறு | -100g |
| பிளம்ஸ் | -50g |
| கஜு | -25g |
| நெய் | - 1 அவுன்ஸ் |
| கற்கண்டு | -100கிறாம் |
| ஏலக்காய் | -1 பைக்கற் |

மேற்படி பொருள்களுடன் பூசைக்குரிய பொருள்களான வீபூதி, சந்தனம், குங்குமம், ஊதுபத்தி, சூடம் ஆகியவை பொதிசெய்யப்பட்டுள்ளன.

**பொதி ஒன்றின் விலை- ரூபா 415.00**

இன்று 09.0 .2009 தொடக்கம் சேவை ஆரம்பிக்கப்படும். எமது கூட்டுறவு நகர் விற்பனை நிலையத்திலும் சகல கிளைகளிலும் பொதிகளைப் பெற்று பயனடையுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**அனைவருக்கும் எமது பொங்கல் நல்வாழ்த்துக்கள்.**

மானிப்பாய் கோவிற்பற்று
ப.நோ.கூ.சங்கம்,
மானிப்பாய். (சி/556566)

**தலைவர், பணிப்பாளர்கள்,**
**பொதுமுகாமையாளர்,**
**பணியாளர்களும்.**


**North Lanka IIT**

New College of Higher Studies,
Ariyakulam Junction,
Jaffna.

Main Street,
Chankanai.
0602214305

**A/L பரீட்சை முடிவுகள் வெளியானதை முன்னிட்டு**
**மாபெரும் புலமைப் பரிசில் திட்டம் 2009 றக்கான**
விண்ணப்ப முடிவுத் திகதி 10-01-2009 வரை நீடிக்கப்பட்டுள்ளது

**B. Sc. in Comp. Sc.** **B. Sc. in Multimedia 1st Year**

**விண்ணப்பித்துவிட்டீர்களா?**

போட்டிப் பரீட்சை 11-01-2009 1:00 மணிக்கு நடைபெறும் விரிவுரைகள் 14-01-2009 11:00 ஆரம்பம்

**Admission Card இனை நேரடியாக பெற்றுக்கொள்ளவும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காஸா மோதல் சம்பவம் குறித்து பாப்பரசர் தரப்பில் கண்டனம்

வத்திக்கான், ஜன. 09

காஸா மீது இஸ்ரேல் மேற்கொண்டுள்ள தாக்குதல்களுக்கு,பாப்பரசர் பதினாறாவது ஆசீர்வாதப்பரின் நீதியமைச்சர் கர்தினால் ரெனட்டோ மார்ட்டினோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.அத்துடன் ''காஸா கொலைக்கள முகாமாக மாறியுள்ளது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

''இருதரப்புகளும் தத்தம் நல ன்களையே சிந்திக்கின்றன. அப்பாவி மக்க ளைப் பற்றி சிந்திப்பதில்லை;அக்கறை காட் வதில்லை. இத்தரப்புகளின் மோதல்களுக் , அப்பாவி மக்கள் தம் உயிரை பலி கொ த்து வருகிறார்கள்'' என்றும் அவர் இரு சாரார் மீதும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கர்தினால் ரெனட்டோ மார்ட்டினோ நீதிக்கும் சமாதானத்திற்குமான வத்திக்கான் பேரவையின் தலைவராகவுமிருக்கிறார். இவர் தமது கண்டனத்தை இத்தாலியின் சுஸிடியாரியோ இணையத்தின் மூலம் வெளியிட்டுள்ளார்.

''இரு சாராருக்குமி டையிலான சண்டைகளில்,பாதுகாப்ப அப்பாவி ஆண்களும்,பெண்களும். ளைகளும் உயிரிழந்து வருகின்றன ரு சாராரும் இந்த உயிரிழப்புகள் குறி தம்மை அலட்டிக் கொள்வதில்லை; விரக்கம் கொள்வதில்லை'' என்றும் கர்தினால் சாடியுள்ளார்.

''காஸா நிலைவரங்களைப் பாருங்கள். மென்மேலும் அந்த பூமி,அப்பாவிகளின் உயிரைப்பறிக்கும் கொலைக்கள முகாமாக மாறிவருகிறது. அப்பாவிகள் பலியாகிறார்கள். இரத்தம் சிந்துகிறார்கள். குடும்பங்கள் கண்ணீர் வடிக்கின்றன'' என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

''நெஞ்சழுத்தங்களையும், சுயநல போக்கையும், நிபந்தனைகளையும் இரு சாராரும் கைவிட்டு, உடனடியாக சமரசப் பேச்சுகளில் ஈடுபட வேண்டும். இந்த நீதியில் இவ்விரு சாராரும் மனித குலத்தையும், மனித நேயத்தையும், கௌரவிக்க முன்வரவேண்டும்'' என்றும் அவர் அழைப்பு விடுத்துள்ளார்.

''இவ்விரு சாராரும் கால தாமதமின்றி, ஓர் உடன்பாட்டுக்கு வர வேண்டும். இத்தருணத்தில் தவிர்க்க முடியாத ஓர் அவசிய ஏற்பாடு இதுவே ஆகும். இவர்கள் ஓர் உடன்பாட்டை எட்டத்தவறினால், இவர்களுக்காக, வேறெவரோ ஒருவர் இக்காரியத்தில் ஈடுபட நேரிடும்'' என்றும் அவர் இருசாராருக்கும் எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளார்.

''உலகம் எப்போதும் வெறுமனே வேடிக்கைப்பார்த்துக் கொண்டிருக்காது. கிறிஸ்தவர்களாகிய எங்களுக்கு மாத்திரம் இந்த பூமி,'புனித'பூமியாக இருக்கவில்லை. யூதர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இது 'புனித'பூமியே. இதனை மாற்றியுரைக்கவோ, மறுத்துத்துரைக்கவோ முடியாது'' என்றும் அவர் அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

''இந்த பூமி இரத்தக்களரிகளின் நிலைக்களனாகிவிட்டது.கொலைக்கள முகாமாகிவிட்டது. இது பெரும் வேதனைக்குரிய சம்பவமாகும். இந்நிலையை இரு சாராரும் மாற்றியமைக்க வேண்டும்'' என்றும் கர்தினால் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இச்சண்டையை உடனடியாகக் கைவிடுமாறு, பாப்பரசர் பதினாறாவது ஆசீர்வாதப்பர் ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேல், காஸாவில் புதன்கிழமை மாத்திரம் மூன்று மணிநேர யுத்த நிறுத்தம் செய்திருந்தது. மக்களுக்கான மனிதாபிமான பொருள்களும், எரிபொருள்களும் தங்குதடையின்றி விநியோகம் செய்யப்படுவதற்காக, இம் மூன்று மணிநேர அவகாசம் வழங்கப்பட்டது என இஸ்ரேலிய இராணுவத் தரப்பு வட்டாரம் தெரிவித்தது.

# துருக்கி அரசைக் கவிழ்க்கச் சதி!

துருக்கி அரசைக் கவிழ்க்க சதித்திட்டம் தீட்டினார்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில் மேலும் முப்பதுக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என துருக்கிய அரச மான அனா தொலியா தெரிவித்தது.

கைது செய்யப்பட்டவர்களில் ஓய் பெற்ற மூன்று இராணுவ ஜெனரல்கள், முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஆகியோரும் அடங்குவர். ஆறு மாகாணங்களில், புதன்கிழமை பொலிஸார் மேற்கொண்ட அதிரடித் தேடுதல் வேட்டையின்போது இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டார்கள் என்றும் இவ்வூட தெரிவித்தது.

உலக அரங்கில்

# காஸா பதற்றத்தை தணிக்க உடன் போர்நிறுத்தம் செய்க!

## எகிப்திய ஜனாதிபதி கோரிக்கை

கெய்ரோ, ஜன. 09

பலஸ்தீனர்களின் பகுதியான காஸாவில் இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலை நிறுத்த எகிப்து புதிய திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது. காஸா பகுதியில் உடனடியாக இஸ்ரேலும் பலஸ்தீனிய போராளி அமைப்புகளும் போர் நிறுத்தம் செய்ய வேண்டும் என்பது சமாதானத் திட்டத்தில் ஓர் அம்சமாகும்.இந்த சமாதானத் திட்டத்தை அரபு நாடுகளும் ஐ.நா. பாதுகாப்புச் சபை உறுப்பு நாடுகளும் வரவேற்றுள்ளன.

எகிப்து சென்றுள்ள பிரான்ஸ் ஜனாதிபதி நிகோலஸ் சர்கோஷியுடன் தாம் ஆலோசனை நடத்திய பின்னர் எகிப்திய ஜனாதிபதி முபாரக் இந்த சமாதானத் திட்டத்தை செவ்வாய்க்கிழமை அறிவித்தார். இரு தலைவர்களும் கெய்ரோவில் கூட்டாக செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தனர்.

காஸா பகுதியில் மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்காக குறிப்பிட்ட காலத்துக்குப் போர் நிறுத்தம் செய்ய இந்தத் திட்டம் வகை செய்கிறது. காஸா பகுதி மீதான தடையை நீக்குவதற்கான வழிமுறைகளும் இந்த புதிய திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளன.

பலஸ்தீன ஜனாதிபதி முஹமது அப்பாஸின் பதாஹ் பிரிவு மேற்கு கரைப் பகுதியிலிருந்து செயற்பட்டு வருகிறது. ஹமாஸ் பிரிவு காஸா பகு விருந்து செயற்பட்டு வருகிறது. தற்போ பகுதி மீதுதான் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது.

எகிப்திய ஜனாதிபதி முபாரக்கின் திட்டம் குறித்து சிரியாவின் தலை நகரான டமாஸ்கஸில் நடைபெறும் கூட்டத்தில் பரிசீலிக்கப்படும் என ஹமாஸ் தரப்பில் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.போரை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காக எகிப்து இந்த சமாதான திட்டத்தை அறிவித்துள்ளது.இஸ்ரேலுக்கும் ஹமாஸ் பிரிவினருக்குமிடையே எகிப்து ஏற்கனவே மத்தியஸ்தம் வகித்து வந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

கூட்டுப் பத்திரிகையாளர் மாநாட்டில், எகிப்திய ஜனாதிபதி முபாரக் பேசுகையில், மீண்டும் பேச்சுகளுக்கு வருமாறு முஹமது அப்பாஸ் தலைமையிலான பலஸ்தீன போராட்ட அமைப்புக்கும் ஹமாஸ் பிரிவுக்கும் அழைப்புவிடுத்தார். எகிப்தில் பேச்சுகளை நடத்தலாம் என்றும் அவர் யோசனை தெரிவித்தார்.

''எகிப்து எடுத்த முயற்சிகளின் பயனாகவே கடந்த 6 மாதங்களாக அங்கு போர் நிறுத்தம் அமுலில் இருந்து வந்துள்ளது'' என்றும் மாநாட்டில் முபாரக் தெரிவித்தார். காஸா பகுதியில் நடைபெறும் போர் முடிவுக்கு வரும் என்ற நம்பிக்கை தற்போது ஏற்பட்டுள்ளது என பிரான்ஸ் ஜனாதிபதி சர்கோஷி இதில் தெரிவித்தார்.

பிரான்ஸ்-எகிப்து கூட்டாக அறிவித்துள்ள இந்த சமாதான திட்டத்தை அரபு நாடுகள் வரவேற்றுள்ளன. ஐ.நா. பாதுகாப்புச்சபை உறுப்பு நாடுகளும் ஆதரித்துள்ளன.

ஹமாஸ் பிரிவுப் போராளிகள் அவ்வப்போது இஸ்ரேலிய பகுதி மீது தாக்குதல்கள் நடத்தி வருவதாகக் கூறி கடந்த 11 நாள்களுக்கு முன்னர் இஸ்ரேலிய இராணுவம் காஸா மீது திடீர்த் தாக்குதல்களை ஆரம்பித்தது. இதுவரை 100 குழந்தைகள் உட்பட 600க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர்.

அதேவேளை, இப்போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அமெரிக்க வெளியுறவுச் செயலர் கொண்டலீசா ரைஸ் அரபு நாடுகளுக்கு விரைந்துள்ளார்.எகிப்திலிருந்து சுரங்கங்கள் வழியாக ஆயுதங்களை கடத்துவதை ஹமாஸ் நிறுத்த வேண்டும் என இஸ்ரேல் நிபந்தனை விதித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# பாக். பாதுகாப்பு ஆலோசகர் நீக்கம் ஜனாதிபதி - பிரதமருக்கிடையில் முறுகல்

பாகிஸ்தானின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் துரானி நீக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக பாகிஸ்தான் பிரதமருக்கும் ஜனாதிபதிக்குமிடையே மோதல் எழுந்துள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மும்பையில் தாக்குதல் நடத்தி பிடிபட்ட ஒரே பயங்கரவாதியான அஜ்மல் அமீர் இமாம் கசாப் பாகிஸ்தானைச் சேர்ந்தவர் தான் என்று கூறிய அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மஹ்மூத் அலி துரானி புதன்கிழமை இரவில் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

பொறுப்பற்ற வகையிலும், பாகிஸ்தானின் பாதுகாப்புக்கு ஊறு விளைவிக்கும் வகையிலும் செயற்பட்டார் எனக் குற்றம்சாட்டி பிரதமர் யூசுப் ராசா கிலானி அவரை பதவி நீக்கம் செய்தார். துரானி செவ்வாய்க்கிழமை கசாப் பாகிஸ்தானைச் சேர்ந்தவர் என்று சூசகமாகத் தெரிவித்திருந்தார்.

கசாப் பாகிஸ்தானைச் சேர்ந்தவர் என அந்நாட்டு தேசிய பாதுகாப்பு ஆலோசகரும், அமைச்சரொருவரும் தெரிவித்த இந்தக் கருத்து மும்பைத் தாக்குதல் பிரச்சினையில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது.

இதனிடையே துரானி பதவி நீக்கம் செய்யப்பட்ட பிரச்சினை பாகிஸ்தான் ஜனாதிபதி அஷிப் அலி சர்தாரிக்கும், பாகிஸ்தான் பிரதமர் யூசுப் ராசா கிலானிக்குமிடையே மோதலை ஏற்படுத்தியுள்ளது என பாகிஸ்தான் நாளேடுகள் கருத்து தெரிவித்துள்ளன.

துரானி நீக்கப்பட்டிருப்பதன் மூலம் பாகிஸ்தானின் இரு அதிகார மையங்கள் இடையே மோதல் ஏற்பட்டுள்ளது என டிடான் நாளேடு தனது தலையங்கத்தில் கூறியுள்ளது.

தேசிய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட பிரச்சினையில் ஆளும் கட்சிக்குள்ளேயே ஒருமித்த கருத்து இல்லை என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

இதனிடையே கசாப் பாகிஸ்தான் நாட்டுக்காரர் என்று அந்நாட்டின் தகவல் துறை அமைச்சர் ஷெர்ரி ரஹ்மான் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அனுப்பிய எஸ்எம்எஸ்சில் குறிப்பிட்டுள்ளார்.

(அ-சி)


# பாக். ஆப்கான் ஜனாதிபதிகள் இரண்டாவது நாளாகவும் பேச்சு

காபூல், ஜன. 09

பாகிஸ்தான் ஜனாதிபதி சர்தாரியும், ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீது கர்சாயும் காபூலில் புதன்கிழமை இரண்டாவது நாளாகச் சந்தித்து இரு நாடுகளின் எல்லையில் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழிப்பது குறித்து விவாதித்தனர் என காபூலிலுள்ள பாகிஸ்தான் தூதரக செய்தித் தொடர்பாளர் கூறினார்.

செவ்வாய்க்கிழமை இரு நாடுகளின் ஜனாதிபதிகளுக்கிடையே நடைபெற்ற முதல் சந்திப்பின்போது இரு நாடுகளிடையே சிறப்பான உறவை ஏற்படுத்த கர்சாய் அழைப்பு விடுத்தார். அதற்கு எப்போதும் தாம் தயாராக இருக்கிறார் என சர்தாரியும் தெரிவித்துக்கொண்டார்'' என ஆப்கான் விஜயத்தை மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷி கூறினார். 'பயங்கரவாதத்தை ஒழிப்பது உள்ளிட்ட பல்வேறு விஷயங்களில் இரு நாடுகளும் இணைந்து செயற்பட முடிவு செய்யப்பட்டுள்ளது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

# லெபனானில் இருந்து நேற்று இஸ்ரேலின் மீது ஷெல் தாக்குதல்



வடஇஸ்ரேலிய பெண் ஒருவர் ஏவுகணைத் தாக்குதலால் சேதமடைந்த தனது சமயலறையை பார்வையிடுகிறார்.

டெல் அவிவ், ஜன. 09

காஸாவில் ஹமாஸ் போராளிகளுடன் மோதலில் ஈடுபட்டு வரும் இஸ்ரேல் மீது நேற்று வியாழக்கிழமை லெபனானிலிருந்து தொடர்ச்சியாக ஏவுகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், இஸ்ரேல் இராணுவம் உடனடியாக பதில் தாக்குதல்களில் ஈடுபட்டது.

லெபனானிலிருந்து ஏவப்பட்ட ஏவுகணைகள், வட இஸ்ரேலைத் தாக்கின. இதையடுத்து, இஸ்ரேல் லெபனான் மீது மூன்று ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டது. இதனால் காஸா மீது இடம்பெற்றுவரும் இஸ்ரேலின் தாக்குதல் லெபனான் வரை நீடிக்கக்கூடுமென்ற அச்சம் எழுந்துள்ளது.

''லெபனானிலிருந்து மேற்கொள்ளப்பட்டத் தாக்குதல்களுக்கு இதுவரை எந்த ஒரு தீவிரவாத அமைப்பும் உரிமை கோரவில்லை. இத்தாக்குதல்களை லெபனானில் நிலைகொண்டுள்ள ஹிஸ்புல்லா தீவிரவாதப் போராளிகளோ அங்குள்ள பலஸ்தீனரின் ஆயுதக் குழுக்களோ நடத்தியிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது'' என மத்திய கிழக்குக்கான பி.பி.ஸி. ஆசிரியர் ஜெரிமி போவென் தெரிவித்தார்.

''இஸ்ரேல் புதன்கிழமை இரவு காஸா துண்டத்திலுள்ள ஹமாஸ் போராளிகளின் இலக்குகளைக் குறிவைத்து 60 வான்வழித் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இதையடுத்து, நேற்று வியாழக்கிழமை வட இஸ்ரேலுக்குள் லெபனானிலிருந்து ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன'' என்றும் அவர் விளக்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மன்மோகன்சிங்கின் கொடும்பாவி எரிப்பு

## ஆர்ப்பாட்டக்காரர்கள் 25 பேர் பொலிஸாரால் கைது






சென்னை, ஜன.09

பிரதமர் மன்மோகன்சிங்கின் தமிழக வருகையைக் கண்டித்து புரட்சிகர இளைஞர் முன்னணியினர் நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில் சென்னை நினைவரங்கம் (மெமோரியல் ஹோல்) அருகில் மன்மோகன்சிங்கின் உருவப் பொம்மையை எரித்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

தமிழர்கள் பல்வேறு போராட்டங்கள் நடத்தியும், போரை நிறுத்தக் கோரியும் செவிமடுக்காத மன்மோகன்சிங்கை தமிழகத்தில் அனுமதிக்க இயலாது என்று கூறி, புரட்சிகர இளைஞர் முன்னணி, புரட்சிகர தொழிலாளர் முன்னணி, ஒடுக்கப்பட்ட மக்கள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தின.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பெண்கள், குழந்தைகள் உள்ளிட்ட பல நூற்றுக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். மன்மோகன் சிங்கே திரும்பிப் போ! என்று முழக்கமிட்டனர். அப்போது அவரின் உருவப்பொம்மையைத் தீயிட்டுக் கொளுத்தினர்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட சுமார் 25 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

முன்னதாக மன்மோகன்சிங்கின் தமிழக வருகையைக் கண்டித்து சுவரொட்டிகளைப் பரப்புரைசெய்த புரட்சிகர இளைஞர் முன்னணியினரையும் தமிழகப் பொலிஸார் கைது செய்தனர்.

இதேவேளை, சென்னை அண்ணாசாலை, அண்ணா சிலை அருகே நேற்றுமுன்தினம் பகல் 11.30 மணியளவில் மர்ம நபர் ஒருவர் திடீரென்று பிரதமர் மன்மோகன்சிங்குக்கு எதிராகவும், மத்திய அரசுக்கு எதிராகவும் கோஷங்கள் எழுப்பியபடி வந்தார். இலங்கைத் தமிழர்களை காப்பாற்றாத மன்மோகன்சிங்கே திரும்பி போ என்று அவர் கோஷம் எழுப்பினார்.

அங்கு போக்குவரத்தை ஒழுங்குப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அவரை பிடிக்க முற்பட்டனர். அதற்குள் அந்த நபர் கையில் சுருட்டி மடக்கி வைத்திருந்த இந்தியத் தேசியக் கொடியை தீ வைத்து கொளுத்தினார். தேசியக் கொடி எரிய தொடங்கியது. உடனே பொலிஸார் மர்ம நபரைப் பிடித்து எரிந்த கொடியைப் பிடுங்கி மேலும் எரியாமல் தீயை அணைத்தனர்.

பின்னர் தேசிய கொடியை தீ வைத்த நபரை பிடித்துச் சென்று விசாரணை நடத்தினர்.

விசாரணையில், அந்த நபரின் பெயர் நாத்திக கேசவன் (வயது - 60) என்றும், சர்மா நகரைச் சேர்ந்தவர் என்றும் தெரியவந்தது. இவர் அரசு இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் ஊழியராக பணிபுரிந்து கட்டாய ஓய்வு பெற்றுள்ளார்.

இலங்கை தமிழர்களை காப்பாற்ற மத்திய அரசும், பிரதமர் மன்மோகன்சிங்கும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காததைக் கண்டித்தும், இந்தப் பிரச்சினையை மக்களின் கவனத்துக்கு கொண்டுசெல்லவுமே தேசியக் கொடியை எரித்தேன் எனவும் கைதான கேசவன் கூறியுள்ளார்.

இவர் தமிழர் தேசிய இயக்கத்தலைவர் பழ.நெடுமாறனின் தீவிர ஆதரவாளர் என்று தெரியவந்துள்ளது. அவரது கட்சியிலும் கேசவன் உறுப்பினராக உள்ளார்.

இவர் நேற்றுமுன்தினம் மாலை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு நீதிமன்றக் காவலில் சிறையில் அடைக்கப்பட்டார்.

# விரைவில் இலங்கை செல்வார் பிரணாப் முதல்வரிடம் மன்மோகன் உறுதியளிப்பு

சென்னை ஜன. 9

**இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி மிக விரைவில் கொழும்பு செல்வார் என்று முதல்வர் கருணாநிதியிடம் பிரதமர் மன்மோகன் சிங் உறுதியளித்துள்ளார்.**

இதுகுறித்த முழு விவரம் வருமாறு -

வெளிநாடு வாழ் இந்தியர்கள் மாநாடு, அதிவிரைவு வீதி அடிக்கல் நாட்டு விழா ஆகியவற்றில் கலந்து கொள்வதற்காக பிரதமர் மன்மோகன் சிங் நேற்றுமுன்தினம் இரவு சென்னை வந்தார்.

பிரதமரை முதலில் முப்படை உயர் அதிகாரிகள் வரவேற்றனர். அதன்பிறகு தமிழக ஆளுநர் சுர்ஜித் சிங் பர்னாலா, மலர்க் கொத்து கொடுத்து வரவேற்றார். முதல்வர் கருணாநிதி பிரதமர் மன்மோகன்சிங்கிற்கு பொன்னாடை போர்த்தும், பூங்கொத்து கொடுத்தும் வரவேற்றார்.

மத்திய அமைச்சர்கள் டி.ஆர்.பாலு, ஜி.கே. வாசன், ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன், வேங்கடபதி, முனியப்பா, வயலார் ரவி, நாராயணசாமி, தமிழக அமைச்சர்கள் ஆற்காடு வீராசாமி, துரைமுருகன், பரிதி இளம் வழுதி, எம்.பி.க்கள் கவிஞர் கனிமொழி, குப்புசாமி, தயாநிதி மாறன், ஞானதேசிகன், ஜே.எம்.ஆருண், அருண் குமார், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் தங்கபாலு, முன்னாள் தலைவர் கிருஷ்ணசாமி உட்பட பலர் இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

பின்னர் பிரதமர் மன்மோகன்சிங் கார் மூலம் ஆளுநர் மாளிகைக்குப் புறப்பட்டுச் சென்றார்.

அன்றிரவு ஆளுநர் மாளிகையில் முதல்வர் கருணாநிதி, பிரதமர் மன்மோகனைச் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போதே பிரதமர் இந்த உறுதிமொழியை அளித்தார்.

மேலும், முதல்வர் கருணாநிதி இலங்கைப் பிரச்சினை குறித்து அவரிடம் விளக்கினார். மத்திய அரசு ஏற்கனவே ஒப்புக்கொண்டவாறு போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கு அமைச்சர் பிரணாப் எப்போது இலங்கைக்குச் செல்கிறார் என்பதைப் பற்றியும், இலங்கைத் தமிழர்களின் அவல நிலை குறித்தும் பிரதமரிடம் விளக்கமாகப் பேசினார். அப்போது பிரதமர் மன்மோகன் -

முதல்வர் கருணாநிதியின் உணர்வைப் புரிந்து கொள்கிறேன் எனவும், எவ்வளவு விரைவில் இயலுமோ அவ்வளவு விரைவில் பிரணாப் முகர்ஜியை இலங்கைக்கு அனுப்புவேன் எனவும் உறுதியளித்தார்.



"பயப்படாமல் கையைத் தாங்க........ ஈழத் தமிழரைக் காப்பாற்றாவிட்டாலும் உங்கள் கையைக் காப்பாற்றுவன்தானே."

## இந்தியச் செய்திகள்

# இலங்கையில் தமிழர் தாக்கப்படுவதை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது

## காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் பேட்டி



சென்னை, ஜன. 9

இலங்கையில் தமிழர்கள் தாக்கப்படுவதை இனியும் பொறுத்துக்கொள்ள முடியாது - என்று தமிழகக் காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் அருண்குமார் கூறியுள்ளார்.

முதல்வர் கருணாநிதியை அருண்குமார் நேற்றுமுன்தினம் மாலை 5 மணிக்கு அவரது இல்லத்தில் சந்தித்துப் பேசினார். அவருடன் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் கே.வி.தங்கபாலு, சட்டமன்றக் காங்கிரஸ் தலைவர் சுதர்சனம் ஆகியோரும் உடன் சென்றனர். இந்தச் சந்திப்பு அரை மணி நேரம் நீடித்தது.

பின்னர் இச்சந்திப்புக் குறித்து செய்தியாளர்களிடம் பேட்டியளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் அவர் கூறியவை வருமாறு-

முதல்வர் கருணாநிதியை மரியாதை நிமித்தமாகச் சந்தித்துப் பேசினேன். இந்தியாவின் சிறந்த தலைவர் கருணாநிதி. அவரை முதல் முதலில் சந்தித்துப் பேசியது எனக்கு பெருமையாக இருக்கிறது. அவரிடம் தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்தோ, தேர்தல் குறித்தோ எதுவும் நான் பேசவில்லை.

இலங்கைத் தமிழர்கள் நம்முடைய சகோதரர்கள். அவர்களுக்கு எப்போதும் எங்களுடைய ஆதரவு உண்டு. அவர்களுக்கு ஏதாவது தீமைகள் ஏற்பட்டால் பொறுத்துக்கொள்ள மாட்டோம். மற்றப்படி இந்தப் பிரச்சினையில் இரு நாட்டு அரசுகளும் பேசித்தான் முடிவு எடுக்க முடியும் என்றார்.

# வன்னிப்பகுதியில் 3 லட்சம் தமிழர்கள் உயிருக்கு உத்தரவாதமின்றித் தவிப்பு

## தமிழகம் சென்ற அகதிகள் தெரிவிப்பு

இராமேஸ்வரம், ஜன. 9

இலங்கையில் நடக்கும் கடும் போரால் கிளிநொச்சி, முல்லைதீவுக்கு இடையே இடம் பெயர்ந்த 3 லட்சம் தமிழர்கள், உயிருக்கு எவ்வித உத்தரவாதமுமின்றி வெட்டவெளியில் தங்கியிருக்கின்றனர் - என்று கடந்த புதனன்று தனுஷ்கோடி வந்த அகதிகள் தெரிவித்தனர்.

மேலும் இதுகுறித்து தகவல்கள் வருமாறு-

இலங்கையில், விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்திற்கும் இடையே கடும் போர் நடந்துவருகிறது.

தற்போது கிளிநொச்சியை இராணுவம் கைப்பற்றிய நிலையில், கிளிநொச்சி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசித்துவந்த 3 லட்சம் தமிழர்கள் அங்கிருந்து வெளியேறி வெட்டவெளியில் தங்கியிருக்கின்றனர் எனத் தெரியவருகிறது.

இதற்கிடையே கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா பகுதியைச் சேர்ந்த 10 ஆண்கள், 9 பெண்கள், 8 சிறுவர், சிறுமியர் ஆகிய 27 பேர், இரு படகுகளில் புறப்பட்டு தனுஷ்கோடி அரிச்சல்முனைக்கு நேற்றுமுன்தினம் புதன் கிழமை வந்தனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த அகதி குமரகுரு (44) செய்தியாளர்களிடம் கூறியவை வருமாறு-

தமிழர்கள் யாரும் தற்போது கிளிநொச்சியில் இல்லை. அங்குள்ள பாடசாலைக் கட்டடங்கள், தண்ணீர்த் தொட்டி, வீடுகள் என்பன ஷெல், விமானத் தாக்குதல்களால் உருக்குலைந்து விட்டன.

கிளிநொச்சியைச் சுற்றி வசித்த 3 லட்சம் தமிழர்கள் அங்கிருந்து வெளியேறி, முல்லைத்தீவு செல்லும் வழியான பரமந்தன், புளியங்குளம், புதுகுடியிருப்பு, விஸ்வமடு, ஒட்டுசுட்டான் பகுதிகளில் கடுங்குளிரிலும், வெயிலிலும் வெட்டவெளியில் தங்கியிருக்கின்றனர்.

கடந்த மாதம் பெய்த மழையால் மலேரியா, வாந்தி போன்ற நோய்கள் பலருக்கு ஏற்பட்டுள்ளன.

வீடுகள், உடைமைகளை இழந்து வெட்டவெளியில் தங்கியுள்ளதால், இலங்கை இராணுவத்தின் குண்டுகள் எப்போது, எங்கே விழும் எனத் தெரியாததால் தமிழர்கள் மிகுந்த அச்சத்திலுள்ளனர் எனக் கண்ணீர் மல்கத் தெரிவித்தார்.

தமிழகத்தில் இருந்துவந்த அரிசி, பருப்பு, எண்ணெய், துணிகள்தான் இலங்கைத் தமிழர்களுக்கு கிடைத்த ஒரே ஆறுதல் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையில்லா பிரேரணை விவாதத்துக்கு நாடாளுமன்றில் நாள் ஒதுக்குவதில் இழுபறி

## ஐ.தே.கட்சி எம்.பிக்கள் நேற்று வெளிநடப்பு

கொழும்பு, ஜன. 09

அரசுக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சியால் சமர்பிக்கப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணையை இன்று நாடாளுமன்றில் விவாதத்திற்கு எடுப்பதற்கு அரசு தீர்மானித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஐ.தே.கட்சி எம்பிக்கள் நேற்று சபையில் இருந்து வெளி நடப்புச் செய்தனர்.

தாம் விரும்பிய தினத்தில் தமக்கு விவாதத்தைத் தராவிட்டால் இனி நாடாளுமன்றில் இடம்பெறும் எந்த விவாதத்திலும் கலந்துகொள்ளப்போவதில்லை என்று கூறிவிட்டே அவர்கள் வெளியேறினர்.

இந்தப் பிரேரணையை இன்று விவாதத்திற்கு எடுப்பது தொடர்பில் அரசுக்கும் ஐ.தே.கட்சிக்கும் இடையில் நேற்று சபையில் கடும் வாக்கு வாதம் இடம் பெற்றது.

இன்று இப்பிரேரணை விவாதத்திற்கு எடுக்கப்படும் என்று சபாநாயகர் டபிள்யு. ஜே. எம். லொக்கு பண்டார நேற்று காலை சபையில் தெரிவித்தார்

அவர் தொடர்ந்து கூறுகையில்,

ஐ.தே. கட்சியால் சமர்பிக்கப்பட்ட அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தை நடத்த இரண்டு நாள்களைத் தருமாறு ஐ.தே. க. கேட்டுக் கொண்டது.

இன்று இந்தப் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள அரசு விரும்பியது. ஐ.தே.கட்சியும் விரும்பியது. அதன்படி இன்று இந்த விவாதம் இடம்பெறும் - என்றார்.

இது தொடர்பாக எதிர்க்கட்சியின் பிரதம கொரடா ஜோஸப் மைக்கல் பெரேரா கூறி யவை வருமாறு:-

இந்தப் பிரேரணையச் சமர்பித்தது நாமே. நாம் விரும்பும் தினத்தில் தான் இது மீதான விவாதத்தை நடத்த வேண்டும். அரசு விரும்பும் தினத்தில் அல்ல.

இந்தப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரசு இப்போது அதை அவசரமாக விவாதத்திற்கு எடுக்க முற்படுகிறது. இதற்கான காரணம் என்ன?

அரசின் அவசரத்திற்கு ஏற்ப வெள்ளிக்கிழமை விவாதத்தை நடத்த நாம் உடன்பட மாட்டோம். எமது உறுப்பினர்கள் தேர்தல் வேலைகளில் ஈடுபட்டுள்ளமையால் இவ்விவாதம் மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ள அவர்களை எம்மால் அவசர அவசரமாக அழைக்க முடியாது.

இந்த விவாதத்தை நாளை (அதாவது இன்று) எடுக்காது இரண்டாவது வாரம் வியாழக்கிழமையும் வெள்ளிக்கிழமையும் எடுக்கலாம். ஆனால் நாளை (இன்று) விவாதத்தில் எடுக்க நாம் உடன்பட மாட்டோம்- என்றார்.

இவரைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அமைச்சர் நிமால் ஸ்ரீ பால டி சில்வா கூறியவை வருமாறு:-

வெள்ளிக்கிழமையும் இப்பிரேரணை மீதான விவாதத்தை நடத்துவதென்று சபாநாயகர் அறிவித்ததை நாம் ஏற்றுக் கொள்கிறோம். ஆகவே வெள்ளிக்கிழமை இந்த விவாதம் நடக்கும்.

இந்த விவாதம் மீதான வாக்கெடுப்பில் ஐ.தே.கட்சி படுதோல்வியடையும். நாம் ஐ.தே.கட்சிக்கு எமது நேரத்தையும் பெற்றுத் தருகிறோம். முடியுமான அளவு அக் கட்சி எம்மைப் பற்றிப் பேசட்டும் -என்றார்.

இதற்கு எம்மால் உடன்பட முடியாது என்று கூறிய ஜோஸப் மைக்கல் பெரேரா, இதுதான் அரசின் முடிவென்றால் இனி நாம் நாடாளுமன்றில் இடம்பெறுகின்ற எந்த விவாதத்திலும் கலந்துகொள்ளமாட்டோம் என்று கூறியது.

அவர் அவ்வாறு கூறி முடித்ததும் ஜோஸப் மைக்கல் பெரேரா உட்பட ஐ.தே.க. எம்பிக்கள் அனைவரும் சபையை விட்டு வெளியேறினர்.(அ-சி)

# ஈழத் தமிழர் படுகொலையைத் தடுக்கக் கோரி சென்னையில் 12 ஆம் திகதி உண்ணாவிரதப்போர்

## தமிழக பா.ஜ.க. தலைவர் அறிவிப்பு

சென்னை, ஜன. 9

சம உரிமை, ஈழத் தமிழரது பிறப்புரிமை என்பதை சுட்டிக் காட்டவும், இலங்கையில் உடனடியாக் போர் நிறுத்தத்தை ஏற்படுத்தி அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு மத்திய அரசை வற்புறுத்தியும் பா.ஜ.க. சார்பில் எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை சென்னையில் உண்ணாவிரதம் நடைபெறும்

- இவ்வாறு தமிழக பா.ஜ.க. தலைவர் இல.கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு-

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மத்திய அரசும், தமிழக அரசும் இரட்டை வேடம் போடுகின்றன. தமிழக சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட போர் நிறுத்தத்தை கோரும் தீர்மானத்தை அமுல்படுத்த தமிழக முதல்வர் நேரில் சென்று வலியுறுத்தியும் பிரதமர் மௌனம் சாதிக்கிறார்.

பிரணாப் முகர்ஜி கொழும்பு செல்வார் என அறிவித்து விட்டு இதுவரை செல்லாமல் இருப்பதும், அதை நியாயப்படுத்தி அமைச்சர் டி.ஆர்.பாலுவே அறிக்கை விடுவதும் தி.மு.க. மீது சந்தேகத்தை கிளப்புகின்றன. தங்களது பதவியை தக்க வைத்துக் கொள்ள ஈழத் தமிழரின் உயிர்களைக் காவு கொடுக்க தி.மு.க. தயாராகி விட்டது என்பதையே இந்த மெத்தனம் நிரூபிக்கின்றது.

அதேபோல சிங்கள இராணுவத்துக்கு ஆயுதமும், ஆலோசனைகளையும் பயிற்சியையும் இந்தியாதான் வழங்கி வருகிறது என்கின்ற குற்றச்சாட்டையும் மத்திய அரசு மறுக்கவில்லை. தற்போது இந்தியாவைப் பின்பற்றி இலங்கை அரசும் கிரிக்கெட் விளையாட தனது வீரர்களை பாகிஸ்தானுக்கு அனுப்புவதில்லை என முடிவு செய்திருக்கின்றமை இந்தியா தந்த ஆயுத உதவிக்கு பிரதிபலனா என்கின்ற சந்தேகம் எழுகிறது.

இராணுவத் தீர்வு சாத்தியமல்ல என்று இந்தியா உட்பட உலக நாடுகள் எல்லாம் கருத்து சொல்லிய பிறகும், தீர்வு என்ன என்பதைச் சொல்லாமலேயே இனப்படுகொலை நடத்திக் கொண்டிருக்கும் சிங்கள அரசின் பயங்கரவாதத்தைக் கண்டிக்கிறேன்.

மத்திய, மாநில அரசுகள் தங்களது இரட்டை வேடத்தைக் கலைத்துவிட்டு இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தத்தை அமுல்படுத்தி பேச்சைத் தொடங்க இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும். மாறாக இலங்கை அரசு போரைத் தொடருமானால் இந்தியா தனது அணுகுமுறையை மறுபரிசீலனை செய்ய நேரிடும் என எச்சரிக்க வேண்டும்.

சம உரிமை, இலங்கைத் தமிழரது பிறப்புரிமை என்பதை சுட்டிக் காட்டவும், இலங்கையில் உடனடியாக போர் நிறுத்தத்தை வலியுறுத்தியும், அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்த மத்திய அரசை வற்புறுத்தி சென்னையில் எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை உண்ணா விரதம் எனது தலைமையிலும் பா.ஜ. கவின் தேசிய செயலாளர் சு.திருநா வுக்கரசர் முன்னிலையிலும் நடைபெறும்- என்றார். (அ-சி)

# வடக்கின் இராணுவ வெற்றியை இப்படித்தான் கொண்டாடுவதா?

## ஊடகங்கள் மீதான தாக்குதல்களால் ஜே.வி.பி. சீற்றம்

கொழும்பு, ஜன. 09

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஊடகத்துறை அமைச்சைப் பொறுப்பேற்றவுடன் ஊடகம் மீதான பாரிய இரண்டு தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று ஜே.வி.பி. நேற்று நாடாளுமன்றில் கூறியது.

இதை உடன் நிறுத்தாவிட்டால் இதற்கு எதிராக அணிதிரளப் போவதாகவும் அக் கட்சி எச்சரித்துள்ளது.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற ஏற்றுமதி சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் எம்.பி. சுனில் ஹந்துன் நெத்தியே இதைக் கூறினார். அவர் தொடர்ந்து கூறியவை வருமாறு:-

இன்று சுதந்திர ஊடகம் பாரிய அச்சுறுத்தலை எதிர்நோக்கியுள்ளது. ஜனாதிபதி ஊடக அமைச்சைக் கையேற்றவுடனேயே 'சிரச' ஊடக நிறுவனம் தாக்கப்பட்டது.

அத்தாக்குதல் மீதான சூடு தணியும் முன்பே 'சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லஸந்த மீது துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது மிகவும் பாரதூரமான ஒன்று. அதிக பாதுகாப்புள்ள பிரதேசத்தில் பட்டப்பகலில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பொலிஸாரின் பாதுகாப்பையும் மீறி எவரால் இந்தத் தாக்குதலை நடத்த முடியும்? இதற்கு அரசுதான் பொறுப்புக் கூறவேண்டும்.

இது ஓர் ஏகாதிபத்தியப் போக்கு. வடக்கு வெற்றியை இப்படித்தான் கொண்டாடுவதா? இது படையினருக்கு அவமானத்தைத்தான் ஏற்படுத்துகிறது.

தனது குடும்பங்களை விட்டுப் பிரிந்து இந்த நாட்டுக்காக - இந்த நாட்டில் வேரூன்றியுள்ள பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகப் போராடும் இராணுவத்தினர் எவரும் இந்தவிதமான தாக்குதலை விரும்பமாட்டார்கள்.

இந்த நிலைமை மேலும் தொடர நாம் இடங்கொடுக்க மாட்டோம். மக்கள் இதற்கு எதிராகக் கிளர்ந்தெழவேண்டும். நாம் இந்த ஊடக அடக்குமுறையை இல்லாதொழிக்க அணிதிரள்வோம். - என்றார்.

# 'த சண்டே லீடர்' ஆசிரியரின் கொலைக்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆழ்ந்த கவலை

லஸந்த விக்கிரமதுங்கவின் படு கொலைக்கு ஐரோப்பிய ஒன்றியம் தனது ஆழ்ந்த கவலையையும், அதிர்ச்சியையும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியத் தின் வெளிவிவகார ஆணையாளர் பெனிட்டா பெரரோ வால்ட்னர் விடுத்த செய்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

'த சண்டே லீடர்' பத்திரிகையின் ஆசிரியர் லஸந்த விக்ரமதுங்கவின் படு கொலையைக் கேள்வியுற்றதும் நான் மிக வும் அதிர்ச்சி யடைந்தேன். கடந்த சில நாள் களுக்கு முன்னர் இலங்கையில் உள்ள தொலைக் காட்சி நிறுவனத்தின் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் பின்னர் இந்தக் கொலை நடந்திருக்கிறது.


லசந்தவின் கொலை நடைபெற்ற இடத்தில் பொலிஸார் விசாரணை நடத்துகின்றபோது

இலங்கையில் ஊடக சுதந்திரம் மோசமாக இருந்துவருகின்ற நிலையில், 'த சண்டே லீடர்' பத்திரிகை ஆசிரியரின் கொலை மூலம் அங்கு இன்னும் மோச மான சூழலைஏற்படுத்தியிருக்கிறது.

இலங்கை அரசு உடனடியாக ஊடகவி யலாளர்களுக்கான பாதுகாப்பை வழங்கி, குற்ற வாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் - என் றுள்ளது. (அ-சி)

# லஸந்தவின் கொலையைக் கண்டித்து கொழும்பில் இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன. 9

'த சண்டே லீடர்' ஆங்கில வார ஏட்டின் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்கவின் படுகொலையைக் கண்டித்து இன்று கொழும்பில் பெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

கொழும்பு, 'லேக்ஹவுஸ்' பத்திரிகை நிறுவனத்திற்கு முன்னால் நண்பகல் 12 மணியளவில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நாட்டில் உள்ள ஊடக அமைப்புக்கள் மற்றும் சில அரசியல் கட்சிகள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தினை ஏற்பாடு செய்துள்ளன.

ஊடக சுதந்திரத்தை நசுக்கும் இச்செயலுக்கு எதிராக அனைவரையும் ஒன்றிணையுமாறு கேட்கப்பட்டிருக்கிறது. (அ-சி)

# மகேஸ்வரன் தருமசுரபி மண்டபம் நாளை காரைநகரில் திறக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஜன.09

முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தியாகராசா மகேஸ்வரனின் நினைவாக காரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரியம்மன் கோயிலில் அமைக்கப்பட்டுள்ள ''மகேஸ்வரன் தருமசுரபி'' மண்டபம் நாளை சனிக்கிழமை அவரது பிறந்த தினத்தன்று திறந்துவைக்கப்படவுள்ளது.

காலை 9 மணிக்கு சிவத்தமிழ் வித்தகர், கலாநிதி, மூதறிஞர் பண்டிதமணி க.வைத்தீஸ்வரக் குருக்களினால் இந்த மண்டபம் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வு தெல்லிப்பழை துர்க்கா தேவி அம்மன் ஆலய அறங்காவலர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த வைபவத்தில் யாழ்.பல்கலைக் கழகமுன்னாள் துணைவேந்தர் பொன் பாலசுந்தரம்பிள்ளை மகேஸ்வரனின் நினைவுகள் குறித்து உரையாற்றவுள்ளார்.

மண்டபத் திறப்புவிழாவை முன்னிட்டு மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்மன் கோயிலில் விசேட பூசையும் இடம் பெறவுள்ளது.

திறப்புவிழாவை அடுத்து மண்டபத்தில் அன்னதானமும் இடம்பெறவுள்ளது.

இறைபணிச் செம்மல் மகேஸ்வரன் இறையடி சேர்ந்து ஒருவருடத்துக்குள் இந்த மண்டபம் அவரது துணைவியார் திருமதி விஜயகலா மகேஸ்வரனின் அனுசரணையில் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# லஸந்த படுகொலைக்கு பிரிட்டன் கடும் கண்டனம்

கொழும்பு, ஜன. 09

சண்டே லீடர் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க சுட்டுக் கொல்லப்பட்டமையை கடுமையாகக் கண்டித்துள்ள பிரிட்டன் இதற்கு காரணமானவர்களுக்கு எதிராக உடனடியாக நடவடிக்கைகளை எடுக்குமாறு கோரியுள்ளது.

இலங்கைக்கான பிரிட்டிஷ் உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள செய்திக் [illegible] இது குறித்து தெரிவிக்கப் பட்டுள்ளது.

சண்டே லீடர் பிரதம ஆசிரியர் சுட்டுக் கொல்லப்பட்டமை, எம்.ரி.வி. தலைமையகத்தின் மீதான தாக்குதல்போன்ற ஊடகங்களுக்கு எதிரான வன்முறை மற்றும் அச்சுறுத்தல்கள் தொடர்வதை பிரிட்டன் மிகக் கடுமையாகக் கண்டிக்கின்றது.

சகல சமூகங்களைச் சேர்ந்தவர்களும் அச்சமின்றி வாழக்கூடிய மோதலுக்கு முடிவு காண்பதற்காக இது போன்ற சம்பவங்களுக்கு, காரணமானவர்களுக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுப்பது அவசியமானது- என்று அந்தச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-சி)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பளையைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னேறி வருகின்றனர் என்றும் அறிவிக்கப் ண்பட்டது.

விடுதலைப் புலிகள் ஆட்லறித் தாக்குதலுக் காகப் பளையைப் பயன்படுத்தி வந்தனர் என வும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

## சண்டேலீடர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் தெரியப்படுத்தினார் என்றும் தகவல் கள் வெளியாகியுள்ளன.

கொலையாளிகளின் துப்பாக்கிக் குண்டு காரின் முன்பக்கக் கண்ணாடியைத் துளைத் துச் சென்று லஸந்தவின் தலையில் பாய்ந் தது. படுகாயமடைந்த லஸந்த விக்ரமதுங்க உடனடியாக களுபோவில மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டார். அங்கு அவரது உயி ரைக் காப்பாற்றுவதற்காக மருத்துவர்கள் மூன்று மணிநேரம் போராடினர்.

லஸந்த விக்ரமதுங்கவிற்கு தலையில் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன என களுபோவில மருத்துவமனையின் இயக்குநர் அனில் ஜெயசிங்க தெரிவித்தார்.

விக்ரமதுங்கவை கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கான முயற் சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், அவ ருக்கு ஏற்பட்டிருந்த பலத்த காயங்கள் கார ணமாக அது சாத்தியமாகவில்லை என்று கூறப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கொழும்பு தேசிய மருத்துவ மனையின் இயக்குநர் டாக்டர் ஹெக்டர் வீரசிங்க தலைமையிலான குழு வினர் களுபோவில வைத்தியசாலைக்கு விரைந் தனர். அங்கு மருத்துவர்கள் மூன்று மணி நேரமாக லஸந்த விக்ரமதுங்கவின் உயிரைக் காப்பாற்றுவதற்காக சத்திரசிகிச்சைகளை மேற் கொண்டபோதிலும் அது பலனளிக்காத நிலை யில் அவர் பிற்பகல் 2.30 மணியளவில் உயிரிழந்தார்.

எம்.ரி.வி, எம்.பி.சி. நிறுவனங்களின் கலையகம் மீது தாக்குதல் இடம்பெற்று இரு நாட்களின் பின்னர் லஸந்த விக்ரமதுங்க துப் பாக்கிச்சூட்டுக்குப் பலியாகியுள்ளமை ஊடக வியலாளர்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது.

## முல்லைவான்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக ஜே.வி.பி. நாடாளு மன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸா நாயக்கா எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இதைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அநுரகுமார திஸ நாயக்கா கூறியவை வருமாறு:-

இலங்கையின் வன்னி வான் பரப்பில் இந்திய உளவுத்துறை விமானங்கள் பறந்து உளவுத் தகவல்களை சேகரித்தன என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இவ்வாறான செயற்பாட்டில் இந்தியா வால் எப்படி ஈடுபட முடியும்? இதற்கான அதி காரத்தை இந்தியாவுக்கு யார் வழங்கியது? இதற்கு அரசு உடன் பதில் சொல்ல வேண் டும்- என்றார்.

அப்போது ஆசனத்திலிருந்து எழுந்த பிரதமர் இந்தச் செய்தி முற்றிலும் பிழையா னது என்று கூறி அமர்ந்து விட்டார். (சி)

## வட்டக்கச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

(வயது - 15), ரேவதி (வயது - 36), பச் சையம்மா (வயது - 66), விஜயன் உச ா(வயது - 30),ரமேஸ் (வயது - 22), சுகந் தினி (வயது - 38) மற்றும் இன்னொருவரும் தர்மபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட் டனர் என்று அந்த இணையத்தளச் செய் திகள் தெரிவித்தன.

அதேவேளை,தர்மபுரம் சந்தியை நோக்கி நேற்றுப் பிற்பகல் ஒருமணியளவில் இடம்பெற்ற தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதலில் மேலும் நால்வர் உயிரிழந்தனர். மேலும் பலர் படுகாயமடைந்தனர் என்று நேற்று மாலை கிடைத்த தகவல்கள் தெரி வித்தன. எனினும், அதனை உறுதிப்படுத்த முடியவில்லை.

பீரங்கித் தாக்குதல்கள் தொடர்வதால் தர்மபுரம் வைத்தியசாலையில் உள்ள நோயா ளிகள் மத்தியில் மிகவும் பதற்ற நிலை உரு வாகியுள்ளது எனவும் அந்த இணையத்தளம் தெரிவித்தது. (த-10)

## முள்ளியவளையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, மாங்குளத்திற்கு வட கிழக்கே காலை 8.45 மணி முதல் 1.45 மணி வரை மூன்று மோதல்கள் இடம்பெற்றுள் ளன. அவற்றின் போது விடுதலைப் புலி களுக்குக் கடும் இழப்புகள் ஏற்பட்டன என வும் படையினருக்கும் இழப்புகள் ஏற்பட் டன என்றும் ஊடக மத்திய நிலையம் அறி வித்துள்ளது.

அம்பாகமத்தில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிவரை மோதல் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கற்சிலைமடுவில் விடு தலைப் புலிகளுடன் மூன்று மோதல்கள் புதன்கிழமை இடம்பெற்றுள்ளன என்றும் இதன்போது படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இழப்புகள் ஏற்பட்டன என் றும் பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (அ-சி)

## அரசுக்குத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கின்றோம். போதுமான ஊடக சுதந்திரத்தை நாம் வழங்கியிருக்கிறோம்.

ஊடகங்கள் மீதான தாக்குதல்களை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கிறோம். 'சிரச' மீதான தாக்குதலானது பயங்கரவாதத்திற்கு, ஜனநாயகத்திற்கும் இடையிலான பிரச் சினை. இத்தாக்குதல் தொடர்பான விசார ணைகள் இடம்பெற்று வருகின்றன.

லஸந்த விக்ரமதுங்க மீதான தாக்குதலை யும் நாம் கண்டிக்கிறோம். இச்சம்பவம் தொடர் பாகவும் சிலர் அரசுமீதே குற்றஞ்சாட்ட முற் படுகின்றனர்.

இது தவிர, நாம் இப்போது புலிகளைத் தடை செய்துள்ளோம். புலிகளைத் தடை செய்த 32 ஆவது நாடு எமது நாடாகும்.

இத்தடைக்குப் பிறகு புலிகளுக்கு ஆதரவாகப் பேசுபவர்கள் மற்றும் புலிகளு டன் உறவுகளை வைத்திருப்பவர்கள் அனை வருக்கும் சட்டரீதியான அதிகூடிய தண் டனை வழங்கப்படும் - என்றார். (அ-சி)

## எஞ்சியுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வன்செயல்களை நிறுத்துவதற்கு உண் மையான முயற்சிகள் எதுவும் மேற்கொள் ளப்படவில்லை என்பதனை இக் கொலைச் சம்பவம் எடுத்துக் காட்டுகிறது.

ஊடகங்களுக்கு எதிரான இத்தகைய சம்பவங்களைத் தடுப்பதற்கு அரசாங்கம் அர்த்தமுள்ள நடவடிக்கை எதிலும் அக்கறை கட்டவில்லை என்பதையும் இந்த நாட்டு மக்கள் வெறுக்கும் அதிகாரத் தனத்தையுமே அரசு கொண்டுள்ளது என்பதையுமே வெளிப் படுத்துகிறது - என்றுள்ளது.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்தப்படவேண்டும். என அங்கு தெரிவிக் கப்பட்டது.இந்த விடயம் குறித்து பொலிஸார் நடத்தும் விசாரணையில் எமக்கு நம்பிக்கை இல்லை இந்தச்சம்பவம் தொடர்பாகவும் எம்.ரிவி ஊடக நிறுவனம் தாக்கப்பட்ட சம் பவம் தொடர்பாகவும் சர்வதேச நிபுணர்க ளைக் கொண்டு விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் - என்று ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க செய்தியாளர் மாநாட் டில் தெரிவித்தார்.

ஊடகத்துறைக்கு எதிராக மேற்கொள் ளப்பட்டுவரும் ஒடுக்குமுறையின் உச்சப் புள்ளியாக பத்திரிகை ஆசிரியர் விக்கிரம துங்கவின் கொலை அமைந்துள்ளது. ஊடக சுதந்திரத்தை மதிக்கும் நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் இந்தப் படுகொலைக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் - என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக் கிம் தெரிவித்தார்.

அண்மைக்காலமாக ஜனநாயகத்தின் மீது நடத்தப்படும் அட்டூழியங்களில் இந்தக் கொலைச் சம்பவம் மிக உச்சமானதாகும். தேர்ந்து எடுக்கப்பட்ட நாள் ஒன்றில் பத்திரி கைகள் தமது முதலாம் பக்கத்தில் கறுப்பு நிறத்தை அச்சிட்டும் தொலைக் காட்சிகள் தமது சேவையை சில மணி நேரம் நிறுத் தியும் தமது ஆட்சேபத்தைத் தெரிவிக்க வேண்டும் - என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட் சியின் மக்கள் பிரிவு இணைப்பாளர் மங்கள சமரவீர நேற்றைய செய்தியாளர் மாநாட்டில் கூறினார்.

எதிர்கட்சிகளின் தலைவர்கள் இன்று வெளிநாட்டு ராஜதந்திரிகளை சந்திக்கிறார் கள் என்று ரவூப் ஹக்கிம் அங்கு அறி வித்தார். (அ-1)

MGC கல்வி நிலையம்
சந்திர சேகரப் பிள்ளையார் கோவில் வீதி, கல்வியங்காடு
2008 A/L பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற மாணவர்களை பாராட்டி வாழ்த்துகின்றோம்.

| | |
|---|---|
| S.கோபிநாத் | 3A |
| P.ரசிதா | 3A |
| S.சுதர்சனா | 3A |
| R.பிரசாந்தி | 3A |
| R.கேசிகா | 2AB |
| S.கோபிகா | 2AB |
| S.பிருந்தா | 2AB |
| R.சிந்துஜா | 2AB |

2011, Day வகுப்புகள் 10.01.2009 காலை (9மணிக்கு) ஆரம்பமாகின்றன
Note:- அனுமதிகள் 15ஆம் திகதி வரை மட்டும்

அரசியல் A.K.றொபின்சன்
A/L 2009
இலங்கை அரசியல்
Bat-I Sat,Sun 9-10
Bat-II Sat,Sun 12-01
Paper Class Sat,Sun 10-11
A/L 2010
ஒப்பீட்டு அரசியல் Sat,Sun 08-09
A/L 2011
அரசியல் எண்ணக்கருக்கள் Sat,Sun 11-12
ஆரம்பம் 10.1.2009(Sat)
NEC

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
பொருளியல் திரு B.கஜிதரன்
PAPER CLASS Sat,Sun 1-2pm
ஆரம்பம்:- 03.01.2009

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
அரசியல் திரு ஸ்ரீரங்கநாத்
A/L 2009 Sat,Sun 9மணி
A/L 2010 Sat,Sun 11மணி
A/L 2011 Sat,Sun 10மணி
ஆரம்பம்:- 03.01.2009

உயிரியல் V.A ஞானேந்திரன்
தெழிற்படும் தாவரம்
ஆரம்பம்: 09.01.2009
இன்று மாலை 4.30 மணி
NEC Clock Tower Road, Jaffna

THE SCIENCE CORNER
Clock Tower Road, Jaffna
BIOLOGY 2010 A/L
புதிய பிரிவு ஆரம்பம்
தொழிற்படும் விலங்கு
ஆரம்பம்- 10.01.2009 (சனி)
Sat, Sun-2.00-3.00
Thu-2.45-4.30
சு.பொன்திவாகரன்

SHAMROCK
2011 A/L
2009 A/L
PHYSICS
Paper
Electricity
Organic
A/L English
Spoken English

Spoken English & Grammar
Campus அனுமதி கிடைத்தோருக்கான விசேட வகுப்பு
காலம்: 1 மாதம் (தினசரி2 hrs- weekdays)
ஆரம்பம்: 12.01.2009 By Mr.B.Ruban (BBA)
(9.00am), (11.00am)

32ஆவது வருட சேவை
விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
A/L 2011
கலை, வர்த்தக வகுப்புகள்
ஆரம்பம் ஜனவரி 10 காலை 8 மணி
* பஸ்ஸிலிருந்து வருபவர்கள் ஸ்ரான்லி றோட்டா லும், சைக்கிளில் வருபவர்கள் சிறாம்பியடி லேனாலும் வரவும்.
* அனுமதிகளை இன்று முதல் பெற்றுக் கொள்ள வும்.

"வெற்றி இலக்கு"
தரம் 1, 2, 3, 4
தரம் 4,5
தூய அச்சகம்
இல: 138, நாவலர் வீதி

College of Accounting
பலாலி வீதி, திருநெல்வேலி.
கணக்கீடு நாளை ஆரம்பம்
A/L 2011 ⟺ ஆரம்பத்திலிருந்து (Sat,Sun 7-8am)
2010 ⟺ ஒற்றுமை பதிவு (Sat,Sun10-11am)
2009 ⟺ கம்பனி முறிவு க/கு (Sat,Sun 8-9am)
2009 ⟺ Day Class
By: J.T.அழகன் (B.Com(Acc Spl) H.N.Dipinacc

யூனிவேர்சல்
கலை வர்த்தகம்
A/L 2011
ஆரம்பம்:- 10.01.2009 சனி
கலை:- 7.00am, வர்த்தகம்:- 9.00am

புதிய பிரிவுகள் ஆரம்பம்
Aat (sri Lanka)
Foundation, Intermediate, Final
Medium:- தமிழ் & English
விரிவுரைகள் 10.01.2009 (8.00a.m) ஆரம்பமாகின்றன
அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும்.
External Degree
GAQ, BA1, BA(Final)
1st in Com, B.Com. (1, 11 & Final) வகுப்புகள் ஆரம்பம்
Banking Course
DBF பிரிவுகள் ஆரம்பம்
Further Detail:
Director,
Jaffna College Undergraduate Dept,
464, Hospital Road, Jaffna.

அன்பு வெளியீடு பாடசாலைக்குரியது
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை- 2009
புதிய பாடத்திட்டத்திற்கு அமைவான
ஆசிரியர் திரு வே. அன்பழகன் அவர்களின்
மாதிரிப் பரீட்சை வினாத்தாள்- 1
11.01.2009 ஞாயிற்றுக்கிழமை வெளிவருகின்றது. பாடசாலை களுக்காக வெளிவரும் இவ் வினாத்தாள்களை பெற்றுப் பயனடையவும்.
தொடர்புகளுக்கு:
அன்போரி கல்வியகம், யாழ் இந்துக்கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்.

கலையகம்
ஆவரங்கால் புத்தூர்
A/L 2011
A/L 2010
A/L 2009
DAY CLASS
ஆரம்பம்: 10.01.2009 சனி 3.00 மணி
A.K.கீர்த்திராஜன், P.கமல், S.R.பாலா
N.B.சுஜிதரன், S.ஜெயக்குமார், English S.JAISAN

Microsoft Certified
Systems Engineer MCP - MCSE
புதிய பிரிவுகள் ஆரம்பம் 11.01.2009 07.00AM/12.00PM
Become an Engineer
MCS 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
Supported by UNDP/URRP

A/L Day Class
(வர்த்தகப் பிரிவு)
ஜனவரி 12
காலை 9.00 மணி
DMI நாவலர் வீதி, யாழ்.

DMI நிர்வாகம் விடுக்கும் விசேட அறிவித்தல்
DMI இல் நாளை 9 மணிக்கு ஆரம்பமாகவிருக்கும் A/L - 2011 & Day Class பிரிவுகளுக்கு இடநெருக்கடி ஏற்படுமென DMI நிர்வாகம் கருதுவதனால் 20 நிமிடங்கள் முன்னதாக சமூகமளிக்குமாறு கேட்கப்படுகிறீர்கள்.
- நிர்வாகம் -
DMI

நாளை ஆரம்பம்
A/L 2011
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
&
Day Class (கலை)
காலை 9.00 மணி
DMI

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.